

# வழிகாட்டும் அருட்பாடல்களும்

## சைவ சமய அபர கிரியைகளும்

# A GUIDE TO SAIVA (HINDU) FUNERAL RITES

*சங்கத்தின் ஆரம்ப காலம் தொடங்கி இறைவனடி சேரும் வரை சங்கத் தொண்டராக விளங்கி சங்க ஆலயத்தில் அருள்மிகு சிதம்பரேஸ்வரப் பெருமான் எழுந்தருளக் காரணமாக இருந்த அமரர் இரத்தினம் பத்மநாதன்*

## Mr. Rattinam Pathmanathan

Former President and Vice Patron

25.10.1944  15.08.2022

சுபகிருது நான்காம் திங்கள் சோமவாரம்
அபரபட்ச சதுர்த்தித்திதிப் பக்கமதில் - தில்லை
சிவனாரைக் காணச் சேர்ந்தனரே வாசுகியை
பவத்துயர் அறுத்த பத்மநாதன்.

வாசுகி என்ற மங்கை நல்லாள் துணையிருக்க சங்கத்துடன் அமரர் பத்மநாதன் ஒன்றியிருந்து உயிர் கொடுத்து வளர்த்த வாழ்க்கை சங்கத்தின் வசந்த காலமாகும். என்றும் நினைவில் நிற்கும் பொன்னான காலம் அது.

அன்று சங்கத்தைக் காப்பாற்றிய முறைகளும், சமைத்த வழிகளும், செய்த பணிகளும் சங்கத்தை மக்களிடையே நிலைபெற்ற வலிமையுள்ள ஒரு கட்டமைப்பாக்கியது. இன்று இந்த 45வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வேளையில் திரு. பத்மநாதனுடைய சேவையை எழுத்தில் பதித்து அச் சேவையை அனைவர் மனதிலும் ஏற்றிவைக்க இந்தச் சில பக்கங்கங்கள் துணை சேர்க்கின்றன.

**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்~** திருக்குறள்,517.

இந்தச் செயலை இன்னார்தான் முறையாகச் செய்து முடிப்பார் என்று ஆராய்ந்து அதனை அவரிடம் ஒப்படைப்பதால் செயல் வெற்றி பெறுகின்றது. இறைவன் தன்னை இந்நாட்டில் நடராஜப் பெருமானாக எழுந்தருளியிருந்து காட்சி கொடுத்து எங்கள் வழிபாட்டை ஏற்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு திரு. பத்மநாதன் அவர்களை செயற்படுத்தி மேற் சொன்ன குறளுக்கு நல்ல உதாரணத்தைக் காட்சிப்படுத்தி இருக்கின்றான்.

## வழிதந்தவர் இன்று பரவெளியில்
## நாம் இங்கு மனவலியில்



சங்க அன்பர்களின் இல்லங்களில் மாதம் ஒரு முறை கூட்டு வழிபாடுகள் நடத்திய நாட்களில் திரு.பத்மநாதன் நிகழ்ச்சியை பூசையுடன் ஆரம்பித்து வைக்கின்ற

20ம் ஆண்டு நிறை விழா (15.11.1997) மலரில் அமரர். பத்மநாதன் அவர்களுடைய கருத்துப் பதிவின் ஒரு பகுதி: "We live in a world which is becoming increasingly materialistic, driven by an insatiable desire for power and possessions. Yet in this vain striving we wander ever from inward peace and real happiness. There is some kind of vacuum in the area of human spirituality. ……..

…..It is my vision and prayer that SMS(UK) will grow and contribute towards cultivatin a positive society through service underlined by Hindu, Tamil values and heritage"

திருமதி. வாசுகி பத்மநாதன் அவர்களுடைய மறைவின் போது, 23.03.2015 எழுதியதிலிருந்து ஒரு பகுதி:

*" இன்று சங்கம் தனக்கென ஓர் ஆலயத்தையும் இன்னும் பல அமைப்புகளையும் கொண்டு கிளை பரப்பியுள்ளது. இப்பாரிய வளர்ச்சிக்கு ஒரு சில தேர்ந்தெடுக்கப்பட்ட பணிகள்தான் அடித்தளமாக அமைந்தன. அதில் மிக முக்கியமானது 1975ல் நாம் ஆரம்பித்த இல்ல பஜனைகளும், கூட்டு வழி-பாடுகளுமேயாகும். ஒவ்வொரு மாதமும் எங்கள் எல்லோரையும் இறை நாமத்தை நாமாவளியாக, திருமுறைகளாக, பஜனைப் பாடல்களாக சொல்லிக் கொடுத்து பாடச் செய்த ஒரு தாயை சங்கம் இழந்துவிட்டது. அவருடைய அந்தப் பாடும் பணிதான் எங்களை ஒன்றாக்கியது. சங்கத்தை வளர்த்தெடுத்தது. சங்கத்தின் பூசைகளில் பக்தி உணர்வை கூட்டு வழி-பாட்டின் வாயிலாகக் கொண்டு வந்து எங்களை ஒன்று கூட்டிவைத்த சக்தியாக 38 ஆண்டுகள் பணி செய்துள்ளார்."* ~



இந்த வரிகள் திரு. பத்மநாதன் அவர்களுக்கும் முற்றாகப் பொருந்தும்.

இந்த வரிகளுக்குள் பொதிந்துள்ள உண்மையை நாம் என்றும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.



சமயக் குரவர்கள் நால்வர் குடியிருக்க நால்வர் மணி மண்டபத்தை 07.02.2004 அன்று சங்கத் தலைவராக அவர் மனைவியுடன் மங்களகரமாகத் திறந்து வைக்க இடம்பெற்ற பூசை அன்று எடுத்த படம் இது.

நால்வர்களுடன் நடராஜப் பெருமானும் சங்கத்தில் எழுந்தருள வேண்டும் என்று ஆசியுரை வழங்கிய சிவஸ்ரீ கயிலை நாகநாதசிவம் அவர்கள் சொன்ன வார்த்தைகளை இறைவன் திரு. பத்மநாதன் அவர்களின் செவிக்கும் சிந்தைக்கும் தெளிவாக்கினான். அன்றே, அக் அவ்விழாவில் திரு. பத்மநாதன் அவர்கள் நடராஜப் பெருமானின் திருவுருவச் சிலையைத் தான் செய்து தருவதாக எங்களுக்கு அறிவித்தார். அவ்வாறே அவர் அன்புடன் செய்து தந்த அந்த ஸ்ரீநடராஜப் பெருமான் திருவிக்கிரக பிரதிஷ்டைக் கும்பாபிஷேகம் 22.06.2008 அன்று இடம்பெற்று சங்கத்தில் ஆலயம் உருவானது.இக்



கும்பாபிஷேகக் கிரியைகளின் போது 21.06.2008 அன்று நடராஜப் பெருமானுக்கு திரு. பத்மநாதன் பாலாபிஷேகம் செய்கின்ற காட்சி இது.

கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறவும் சிதம்பரத்திலிருந்து சிவஸ்ரீ இரத்தினதாண்டவ தீக்ஷிதர் வந்து முன்னின்று நடத்திவைக்கவும் திரு பத்மநாதன் காரணமாக இருந்தார்.




02.02.2014 அன்று திரு. திருமதி பத்மநாதன் குடும்பத்தினர் எமது ஆலயத்தில் சிதம்பர ரகசியம்~ வில்வ மாலை பிரதிஷ்டை செய்த காட்சி இது.



இசையை இரசிப்பதும் கலஞர்களை பாராட்டிக் கொளரவம் செய்வதும் அவருடைய பண்பான குணம். அந்த மகிழ்வை இங்கு காணலாம்.




21ம் ஆண்டு நிறை விழாவில் தலைமை உரை நல்குகின்றார்

திரு. பத்மநாதன் அவர்களைக் கருவியாகக் கொண்டு சிவபெருமான் சங்க ஆலயத்தில் கோயில் கொண்டுள்ளார். இதற்கு அவருடைய பூர்வ புண்ணிய நல்வினையே கரரணமாகும்.

அந்த நல் வினையால் நாம் அவரிடம் கண்ட அவரின் இறை அன்பும், சிதம்பரம் ஆனந்த நடராஜப் பெருமானிடம் அவர் கொண்டிருந்த நீண்ட கால ஈடுபாடும், தில்லை தீக்ஷிதர்களுடன் வைத்திருந்த பணிவான உறவும் இன்னும் பல தூய முறைகளும் அவருடைய வாழ்க்கைப் பயணத்தில் நாம் கண்ட உண்மைகள்.

திரு. பத்மநாதனிடம் நாம் கண்ட உயர்ந்த குணங்களைப் பின்பற்றி எங்கள் ஆலயத்தை அவர் கருத்துடன் பாதுகாத்த வண்ணமே நாமும் செய்ய எங்களின் எண்ணங்களில் சிவபெருமான் துணையிருக்க வேண்டும்.

சங்க ஆட்சிக் குழுவில் அமரர் பத்மநாதன் அவர்களுடைய பங்களிப்பு:

1ம்ஆண்டு 1977-1978: செயற்குழு அங்கத்தவர்
2ம்ஆண்டு 1978-1979 செயற்குழு அங்கத்தவர்
3ம்ஆண்டு 1979-1980: துணைத் தலைவர்
4ம்ஆண்டு 1980-1981: துணைத் தலைவர்
5ம்ஆண்டு 1981-1982 துணைத் தலைவர்
6ம்ஆண்டு 1982-1983: துணைத் தலைவர்
7ம்ஆண்டு 1983-1984: துணைத் தலைவர்
8ம்ஆண்டு 1984-1985 காப்பாளர்
9ம்ஆண்டு 1985-1986: காப்பாளர்
10ம்ஆண்டு 1986-1987 காப்பாளர்
11ம்ஆண்டு 1987-1988 காப்பாளர்
12ம் ஆண்டு 1988-1989 துணைத் தலைவர்
13ம் ஆண்டு 1989-1990 துணைத் தலைவர்
14ம் ஆண்டு 1990-1991 துணைத் தலைவர்
16ம் ஆண்டு 1992-1993 துணைத் தலைவர்
17ம் ஆண்டு 1994-1994 துணைத் தலைவர்
18ம் ஆண்டு 1994-1995 துணைத் தலைவர்
19ம் ஆண்டு 1995-1996 சங்கத் தலைவர்
20ம் ஆண்டு 1996-1997 சங்கத் தலைவர்
21ம் ஆண்டு 1997-1998 சங்கத் தலைவர்
22ம் ஆண்டு 1998-1999 காப்பாளர்
23ம் ஆண்டு 1999-2000 காப்பாளர்
24ம் ஆண்டு 2000-2001 காப்பாளர்
25ம் ஆண்டு 2001-2002 காப்பாளர்
26ம் ஆண்டு 2002-2003 சமயச் செயலாளர்
27ம் ஆண்டு 2003-2004 செயற்குழு அங்கத்தவர்
28ம் ஆண்டு 2004-2005 பரீட்சைச் செயலாளர்
29ம் ஆண்டு 2005-2006 பதவியில் இல்லை
30ம் ஆண்டு 2007 தொடக்கம் 45ம் ஆண்டு 2022 வரை துணைப் போஷகர் - 16 ஆண்டுகள்.

# பதிப்புரை

சைவசமய குரவரும், ஏனைய அருளாளர்களும் எமக்கு அளித்துள்ள அருட்பாடல்கள் ஏராளம். அவற்றுள் இவ்வுலக வாழ்வில் நாம் விரும்பும் பணம், பதவி, மணவினை, தேகசுகம், நாட்டுக்கு மழை, துன்பவிடுதலை, மனஅமைதி மட்டுமல்லாது மறு உலக வாழ்வில் வேண்டுவனவற்றையும்- ஏன் வீடுபேற்றையும்கூடத் தரவல்ல தோத்திரங்கள் உள்ளன. நம்பிக்கையுடனும், பக்தியுடனும் உரிய அருட்பாடல்களைத் தொடர்ந்து பாராயணம் செய்துவரின் வேண்டியவற்றை அடையலாம் என்பது அடியவர் அனுபவம்.

பொதுவான பாராயணம், கூட்டுவழிபாடுகளுக்குப் பயன்படத்தக்க அருட்பாடற் தொகுதிகள் பல எமது சங்கத்தால் வெளியிடப்பட்டுள்ளன. ஒரு குடும்பத்தில் அன்பிற்குரிய ஒருவர் இவ்வுலக வாழ்வை நீத்துவிட்ட நேரத்தில், யாருக்கு யார் ஆறுதல் சொல்வதெனத் தெரியாது அங்கலாய்க்கின்ற அந்த நேரத்தில், மனதிற்கு அமைதி தரக்கூடிய தோத்திரப் பாடல்கள் சிலவற்றைத் தெரிந்தெடுத்து இப்போது வெளியிடுகிறோம். குடும்பத்தில் உள்ளவர்களும், துக்கம் பகிர்ந்து கொள்ள வருகிறவர்களும் தனித்தும் கூடியும் பிரார்த்தனை செய்தற்கு இவை உகந்தவை.

இவ்வாறான கவலைமிகுந்த வேளையில் என்ன என்ன செய்ய வேண்டும் என்று தெரியாமலோ, தெரிந்தும் பதற்றத்தினாலோ குழப்பமுறுவது மக்கள் இயல்பு. அந்நேரத்தில் உதவக்கூடிய குறிப்புக்களும், இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள், விளக்கங்களும், தொடர்ந்து நடைபெறவேண்டிய காரியங்களும் இவ்வெளியீட்டில் இடம் பெறுகின்றன.

நமது அன்புக்குரியவர்களின் பிரிவின் போது, நமக்கு ஓரளவு அமைதியைத் தரும் எனக் கருதும் வாழ்க்கைக்கு வழிகாட்டும் இந்த அருட்பாடல்களை வெளியிடுவதில் எங்களுக்கு அமைதியைத் தருகின்றது. இந்நூல் நமது சைவ சமய வெளிநாடு வாழ் இளம் தலைமுறையினர் புரிந்து கொள்ளும் வகையில் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வெளியிடுகிறோம்.

சகோதரர்கள் :

திரு. **வயிரமுத்து இரத்தினம் இராமநாதன்**

திரு. **வயிரமுத்து இரத்தினம் லோகநாதன்**

இலண்டன்.

பிள்ளைகள் :

திருமதி. **விஜயலெட்சுமி தேவகுமார்**

ஆஸ்திரேலியா

திரு. **செந்தூரன் பத்மநாதன்**

இலண்டன்

வெளியிட்டு நாள் : 03-10-2022

உ

சிவமயம்

# வாழ வழிகாட்டும் அருட்பாடல்கள்

## அந்திம காலத்தில் பாராயணம் செய்தற்குகந்தவை

### மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமமாகி நின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈசனடி போற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே யவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எங்காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி யறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

## திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென் றருள்செய்வான் அமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்கும் திருவையாறே.

பல்வீழ்ந்து நாத்தளர்ந்து மெய்யில்வாடிப் பழிப்பாய வாழ்க்கை ஒழியத்தவம்
இல்சூழிடங் கருதி நின்றீரெல்லாம் இறையே பிரியா தெழுந்தபோதும்
கல்சூழரக்கன் கதறச் செய்தான் காதலியும் தானும் கருதிவாழும்
தொல்சீர்க் கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடம் தொழுமின்களே.

நீ நாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சா நாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூ நாளும் தலை சுமப்பப் புகழ்நாமம் செவிகேட்ப
நா நாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

இன்றுநன்று நாளைநன்று என்றுநின்ற இச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்தயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றைதுன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே.

தந்தையார் போயினார் தாயாரும் போயினார் தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியால் ஏழை நெஞ்சே
அந்தணா ரூர்தொழு துய்யலாம் மையல்கொண் டஞ்சல் நெஞ்சே.

பாவமேவும் உள்ளமோடு பத்தியின்றி நித்தலும்
ஏவமான செய்துசாவ தன்முனம் இசைந்துநீர்
தீபமாலை தூபமும் செறிந்தகைய ராகிநம்
தேவதேவன் மன்னுமூர் திருந்துகாழி சேர்மினே.

## திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட் டென்னையோர் உருவ மாக்கி
இன்பிருத்தி முன்பிருந்த வினைதீர்த்திட் டென்னுள்ளம் கோயில் ஆக்கி
அன்பிருத்தி அடியேனைக் கூழாட்கொண் டருள்செய்த ஆரூ ரர்தம்
முன்பிருக்கும் விதியின்றி முயல்விட்டுக் காக்கைப்பின் போன வாறே.

அங்கத்தை மண்ணுக் காக்கி ஆர்வத்தை உனக்கே தந்து
பங்கத்தைப் போக மாற்றிப் பாவித்தேன் பரமா நின்னைச்
சங்கொத்த மேனிச் செல்வா சாதல்நாள் நாயேன் உன்னை
எங்குற்றாய் என்ற போதால் இங்குற்றேன் என்கண் டாயே.

கருவாய்க் கிடந்துன் கழலே நினையும் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூரரனே.

கருவுற்ற நாள்முத லாகஉன் பாதமே காண்பதற்கு
உருகிற்றென் உள்ளமும் நானுங்கிடந்தலந் தெய்த்தொழிந்தேன்
திருவொற்றி ஊரா திருவால வாயா திருவாரூரா
ஒருபற்றி லாமையும் கண்டிரங் காய்கச்சி ஏகம்பனே.

நடலை வாழ்வுகொண் டென்செயதிர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலின் நஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே.

கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை
கருநரம்பும் வெள்ளெலும்பும் சேர்ந்தொன் றாகி
உருவாகிப் புறப்பட்டிங் கொருத்தி தன்னால்
வளர்க்கப்பட் டுயிராரும் கடைபோ காரால்
மருவாகி நின்னடியே மறவேன் அம்மான்
மறித்தொருகால் பிறப்புண்டேல் மறவா வண்ணம்
திருவாரூர் மணவாளா திருத்தெங் கூரா
செம்பொன் ஏகம்பனே திகைத்திட் டேனே.

ஐயினால் மிடறடைப்புண் டாக்கை விட்டு
ஆவியார் போவதுமே அகத்தார் கூடி
மையினால் கண்ணெழுதி மாலை சூட்டி
மயானத்தில் இடுவதன்முன் மதியம் சூடும்
ஐயனார்க் காளாகி அன்பு மிக்கு
அகம்குழைந்து மெய்யரும்பி அடிகள் பாதம்
கையினால் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.

எத்தாயர் எத்தந்தை எச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவர் இல்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே.

தந்தையார் தாயார் உடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தாம் ஆரே
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
மாயமாம் இதற்கேதும் மகிழ வேண்டாம்
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவும் திளைக்கும் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சி வாய
என்றெழுவார்க் கிருவிசும்பில் இருக்க லாமே.

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுள்ளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

பரிந்த சுற்றமும் மற்றுவன் துணையும்
பலரும் கண்டழு தெழஉயிர் உடலைப்
பிரிந்து போம்இது நிச்சயம் அறிந்தால்
பேதை வாழ்வெனும் பிணக்கினைத் தவிர்ந்து
கருந்தடங் கண்ணி பங்கனை உயிரைக்
கால காலனைக் கடவுளை விரும்பிச்
செருந்தி பொன்மலர் திருத்தினை நகருள்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே.

வாழ்வாவது மாயம்இது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழாதறம் செய்மின்தடங் கண்ணான் மலரோனும்
கீழ்மேலுற நின்றான்திருக் கேதாரமெ னீரே.

மணமென மகிழ்வர் முன்னே மக்கள்தாய் தந்தை சுற்றம்
பிணமெனச் சுடுவர் பேர்த்தே பிறவியை வேண்டேன் நாயேன்
பணையிடைச் சோலை தோறும் பைம்பொழில் விளாகத் தெங்கள்
அணைவினைக் கொடுக்கும் ஆரூர் அப்பனே அஞ்சி னேனே.

மடித்தாடும் அடிமைக்கண் அன்றியே மனனேநீ வாழுநாளும்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கில் இடும்போது தடுத்தாட்கொள்வான்
கடுத்தாடும் கரதலத்தில் தமருகமும் எரியகலும் கரியபாம்பும்
பிடித்தாடி புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றாமன்றே.

ஒவுநாளுணர் வழியுநாள்உயிர் போகுநாள்உயர் பாடைமேல்
காவுநாளிவை என்றலால்கரு தேன்கிளர் புனற்காவிரிப்
பாவுதண்புனல் வந்திழிபரஞ் சோதிபாண்டிக் கொடுமுடி
நாவலாஉனை நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே.

## மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
    தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றி
கனியைநேர் துவர்வாயார் என்னும் காலால்
    கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு
இனிஎன்னே உய்யுமா றென்றென் றெண்ணி
    அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்தம் இல்லா மல்லற்
    கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே.

போற்றி ஓம் நமச்சிவாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றி ஓம் நமச்சிவாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றி ஓம் நமச்சிவாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றி ஓம் நமச்சிவாய சயசய போற்றி போற்றி.

இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்கு
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே.

பொத்தை ஊன்சுவர் புழுப்பொதிந் துளுத்தசும்
    பொழுகிய பொய்க்கூரை
இத்தை மெய்யெனக் கருதிநின் றிடர்க்கடல்
    சுழித்தலைப் படுவேனை
முத்து மாமணி மாணிக்க வயிரத்த
    பவளத்தின் முழுச்சோதி
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
    அதிசயம் கண்டேனே.

பாருரு வாய பிறப்பற வேண்டும் பத்திமையும் பெற வேண்டும்
சீருரு வாய சிவபெருமானே செங்கமலம் மலர் போல்
ஆருரு வாய என்ஆரமு தேஉன் அடியவர் தொகை நடுவே
ஓருரு வாய நின்திருவருள் காட்டி என்னையும் உய்யக் கொண்டருளே.

## திருவிசைப்பா

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
 ஏழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை என்றால்
 அஞ்சலென் றருள்செய்வான் கோயில்
கைவரும் பழனம் குழைத்தசெஞ் சாலிக்
 கடைசியர் களைதரு நீலம்
செய்வரம் பரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
 திருவளர் திருச்சிற்றம் பலமே.

அறிவும் மிக்கநல் நாணமும் நிறைமையும் ஆசையும் இங்குள்ள
உறவும் பெற்றநற் றாயொடு தந்தையும் உடன்பிறந் தவரோடும்
பிரிய விட்டுனை அடைந்தனன் ஏன்றுகொள் பெரும்பற்றப் புலியூரின்
மறைகள் நான்கும் கொண் டந்தணர் ஏத்தநன் மாநடம் மகிழ்வோனே.

## திருப்பல்லாண்டு

எந்தை எந்தாய் சுற்றம் முற்றும்
 எமக்கமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன் சீர்
 அடியார் அடிநாய் செப்புரை
அந்தமில் ஆனந்தச் சேந்தன் எனைப்புகுந்
 தாண்டுகொண் டாருயிர் மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே என்று
 பல்லாண்டு கூறுதுமே.

## திருமந்திரம்

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே.

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணம் சேர்ந்தார்
இடப்பக்கமே இறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே.

பந்தல் பிரிந்தது பண்டாரங் கட்டற்ற
ஒன்பது வாசலும் ஒக்க அடைந்தன
துன்புறு காலம் துரிசுவர மேன்மேல்
அன்புடை யார்கள் அழுதகன் றார்களே.

ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்
ஊர்த்துறைக் காலே ஒழிவர் ஒழிந்தபின்
வேர்த்தலை போக்கி விறகிட் டெரிமூட்டி
நீர்த்தலை மூழ்குவர் நீதியி லோரே.

மதுவூர் குழலியும் மாடும் மனையும்
இதுவூர் ஒழிய இதணம தேறி
பொதுவூர் புறஞ்சுடு காடது நோக்கி
மதுவூர வாங்கியே வைத்தகன் றார்களே.

## <u>க்ஷேத்திரத் திருவெண்பா.</u>

குந்தி நடந்து குனித்தொருகை கோல்ஊன்றி
நொந்திருமி ஏங்கி நுரைத்தேறி-வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை.

காலைக் கலையிழையால் கட்டித்தாங் கையார்த்து
மாலை தலைக்கணிந்து மைஎழுதி-மேலோர்
பருக்கோடி மூடப் பலர்அழா முன்னம்
திருக்கோடி காஅடைநீ சென்று.

தொட்டுத் தடவித் துடிப்பொன்றும் காணாது
பெட்டப் பிணமென்று பேரிட்டுக்- கட்டி
எடுங்களத்தா என்னாமுன் ஏழைமட நெஞ்சே
நெடுங்களத் தான்பாதம் நினை.

இழவாடிச் சுற்றத்தார் எல்லாரும் கூடி
விழவாடி ஆவிவிடா முன்னம்-மழபாடி
ஆண்டானை ஆரமுதை அன்றயன்மால் காணாமை
நீண்டானை நெஞ்சே நினை.

## பெரிய புராணம்

மண்முதலாம் உலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் எனப்புகன்று
நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டஅர சமர்ந்திருந்தார்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

சென்று கண்ணுதல் திருமுன்பு தாழ்ந்துவீழ்ந் தெழுந்துசே ணிடைவிட்ட
கன்று கோவினைக் கண்டணைந் ததுஎனக் காதலின் விரைந்தெய்தி
நின்று போற்றிய தனிப்பெருந் தொண்டரை நேரிழை வலப்பாகத்(து)
ஒன்றும் மேனியர் ஊரனே வந்தனை என்றனர் உலகுய்ய.

எல்லா உலகும் ஆர்ப்பெடுப்ப எங்கும் மலர்மா ரிகள்பொழியப்
பல்லா யிரவர் கணநாதர் பாடி ஆடிக் களிபயிலச்
சொல்லார் மறைகள் துதிசெய்யச் சூழ்பல் லியங்கள் எழச்சைவ
நல்லா றோங்க நாயகமாம் நங்கள் பெருமான் தொழுதணைந்தார்.

## திருப்புகழ்

தொந்தி சரிய மயிரே வெளிறநிரை
தந்த மசைய முதுகே வளையஇதழ்
தொங்க ஒருகை தடிமேல் வரமகளிர் நகையாடி
தொண்டு கிழவன் இவனார் எனஇருமல்
கிண்கி ணெனமுன் உரையே குழறவிழி
துஞ்சு குருடு படவே செவிடுபடு செவியாகி
வந்த பிணியும் அதிலே மிடையுமொரு
பண்டி தனும்மெய் உறுவே தனையுமிள
மைந்தர் உடைமை கடனே தெனமுடுது துயர்மேவி
மங்கை அழுது விழவே யமபடர்கள்
நின்று சருவ மலமே ஒழுகஉயிர்
மங்கு பொழுது கடிதே மயிலின்மிசை வரவேணும்
எந்தை வருக ரகுநா யகவருக
மைந்தவருக மகனே இனிவருக
என்கண் வருக எனதா ருயிர்வருக அபிராமா

இங்கு வருக அரசே வருகமுலை
உண்க வருக மலர்சூ டிடவருக
என்று பரிவி னொடுகோ சலைபுகல வருமாயன்
சிந்தை மகிழு மருகா குறவரிள
வஞ்சி மருவும் அழகா அமரர்சிறை
சிந்த அசுரர் கிளைவே ரொடுமடிய அடுதீரா
திங்கள் அரவு நதிசூ டியபரமர்
தந்த குமர அலையே கரைபொருது
செந்தி நகரில் இனிதே மருவிவளர் பெருமாளே.

**கந்தரலங்காரம்**

காவிக் கமலக் கழலுடன் சேர்த்தென்னைக் காத்தருள்வாய்
தூவிக் குலமயில் வாகனனே துணையேது மின்றித்
தாவிப் படரக் கொழுகொம் பிலாத தனிக்கொடிபோல்
பாவித் தனிமனம் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே.

**கந்தரநுபூதி**

வளைபட்டகை மாதொடு மக்களெனும்
தளைபட்டழியத் தகுமோ தகுமோ
கிளைபட்டெழுசூ ருரமும் கிரியும்
தொளைபட்டுருவத் தொடுவே லவனே.

கார்மாமிசை காலன்வரில் கலபத்
தேர்மாமிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார்பவலா ரிதலாரி யெனும்
சூர்மாமடியத் தொடுவே லவனே

கூகாவெனவென் கிளைகூ டியழப்
போகாவகைமெய்ப் பொருள்பே சியவா
நாகாசலவே லவநா லுகவித்
யாகாசுரலோ கசிகா மணியே.

சாகாதெனையே சரணங் களிலே
காகாநமனார் கலகம் செயுநாள்
வாகாமுருகா மயில்வா கனனே
யோகாசிவஞா னொபதே சிகனே

## பட்டினத்தார் பாடல்கள்

என்பெற்ற தாயாரும் என்னைப் பிணமென் றிகழ்ந்து விட்டார்
பொன்பெற்ற மாதரும் போவென்று சொல்லி13ப் புலம்பி விட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம் வந்து குடமுடைத்தார்
உன்பற் றொழிய ஒருபற்று மில்லை உடையவனே

தாயாரும் சுற்றமும் பெண்டிரும் கைவிட்டுத் தாழ்ந்திடுநாள்
நீயாரு நானார் எனப்பகர் வாரந்த நேரத்திலே
நோயோடும் வந்து குடிகொள்வ ரேகொண்ட நோயும்ஒரு
பாயாரும் நீயுமல் லாற்பின்னை ஏதுநட் பாமுடலே.

விட்டுவிடப் போகுதுயிர் விட்டவுட னேஉடலைச்
சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார்-பட்டதுபட்(டு)
எந்நேர மும்சிவனை ஏத்துங்கள் போற்றுங்கள்
சொன்னேன் அதுவே சுகம்.

## பட்டினத்தார் உடற்கூற்று வண்ணம்

ஒருமட மாதும் ஒருவனு மாகி
இன்பசு கந்தரும் அன்பு பொருந்தி
உணர்வு கலங்கி ஒழுகிய விந்து
ஊறுசு ரோணித மீது கலந்து
பனியிலொர் பாதி சிறுதுளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதும வரும்பு கமடமி தென்று
பார்வை மெய்வாய்செவி கால்கைக ளென்ற
உருவமு மாகி உயிர்வளர் மாதம்
ஒன்பதும் ஒன்றும் நிறைந்து மடந்தை
உதரம கன்று புவியில் விழுந்து

யோகமும் வாரமும் நாளு மறிந்து
மகளிர்கள் சேனை தரவணை ஆடை
மண்பட உந்தி உதைந்து கவிழ்ந்து
மடமயில் கொங்கை அமுதம் அருந்தி
ஓரறி வீரறி வாகி வளர்ந்து
ஒளி நகையூறல் இளமட வாரும்
உவந்து முகந்திட வந்து தவழ்ந்து
மடியி லிருந்து மழலை மொழிந்து

வாஇரு போஎன நாமம் விளம்ப
உடைமணி ஆடை அரைவடம் ஆட
உண்பவர் தின்பவர் தங்களொ டுண்டு
தெருவி லிருந்து புழுதி யளைந்து
தேடிய பாலரொ டோடி நடந்து
அஞ்சுவயதாகி விளையாடியே

உயர்தரு ஞான குருஉப தேசம்
முத்தமி ழின்கலை யும்கரை கண்டு
வளர்பிறை யென்று பலரும் விளம்ப
வாழ்பதி னாறு பிராயமும் வந்து
மயிர்முடி கோதி அறுபத நீல
வண்டிமிர் தண்தொடை கொண்டை புனைந்து
மணிபொன் இலங்கு பணிகள் அணிந்து
மாகதர் போகதர் கூடி வணங்க

மதன சொரூபன் இவனென மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு சுழிய எறிந்து
மாமயில் போலவர் போவது கண்டு
மனது பொறாமல் அவர்பிற கோடி
மங்கல செங்கல சம்திகழ் கொங்கை
மருவ மயங்கி இதழமு துண்டு
தேடிய மாமுதல் சேர வழங்கி
ஒருமுத லாகி முது பொருளாய்
இருந்த தனங்களும் வம்பில் இழந்து
மதன சுகந்த விதனமி தென்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து
வளமையும் மாறி இளமையும் மாறி
வன்பல் விழுந்திரு கண்கள் இருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து
வாத விரோத குரோத மடைந்து
செங்கையிலினோர் தடியுமாகியே

வருவது போவ தொருமுது கூனும்
மந்தியெ னும்படி குந்தி நடந்து
மதியும் அழிந்து செவிதிமிர் வந்து
வாயறி யாமல் விடாமல் மொழிந்து
துயில் வருநேரம் இருமல் பொறாது

தொண்டையும் நெஞ்சமு லர்ந்து வறண்டு
துகிலு மிழந்து சுணையு மழிந்து
தோகையர் பாலகர் கோரணி கொண்டு
கலியுக மீதில் இவர் மரியாதை
கண்டிடு மென்பவர் சஞ்சல மிஞ்ச
கலகல வென்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து

தெளிவு மிராமல் உரைதடு மாறி
சிந்தையும் நெஞ்சமும் உலைந்து மருண்டு
திடமும் உலைந்து மிகவும் அலைந்து
தேறிநல் ஆதர வேதென நொந்து
மறையவன் வேதன் எழுதிய வாறு
வந்தது கண்டமும் என்று தெளிந்து
இனியென கண்டம் இனியென தொந்தம்
ஏதினி வாழ்வு நிலாதினி நின்ற
கடன்முறை பேசும் என உரைநா
வுறங்கி விழுந்துகை கொண்டு மொழிந்து
கடைவழி கஞ்சி ஒழுகிட வந்து
பூதமும் நாலு சுவாசமும் நின்று
நெஞ்சுதடுமாறி வருநேரமே

வளர்பிறை போல எயிறும் உரோம
மும்சடை யும்சிறு குஞ்சியும் மிஞ்ச
மனதும் இருண்ட வடிவும் இலங்க
மாமலை போல்யம தூதர்கள் வந்து
வலைகொடு வீசி உயிர்கொடு போக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கினரே இவர் கால மறிந்து
பழையவர் காணும் எனும் அயலார்கள்
பஞ்சு பறந்திட நின்றவர் பந்தர்
இடுமென வந்து பறையிட முந்த
வேபிணம் வேக விசாரியும் என்று

பலரையும் ஏவி முதியவர் தாம்
இருந்த சவம்கழு வும்சிலர் என்று
பணிதுகில் தொங்கல் களபம் அணிந்து
பாவகமே செய்து நாறும் உடம்பை

வரிசை கெடாமல் எடுமென ஓடி
வந்திள மைந்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலை அடைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து
விறகிடை மூடி அழல்கொடு போட
வெந்து விழுந்து முறிந்து நிணங்கள்
உருகி எலும்பு கருகி அடங்கி
ஓர்பிடி நீறும் இலாத உடம்பை
நம்பும்அடியேனை இனிஆளுமே.

## குரு நமச்சிவாயர் அருளிய
## நமச்சிவாய மாலை

மந்திர நமச்சி வாய மாலைநான் செப்பு தற்குக்
கந்தவேள் தனக்கு மூத்த கணபதி காப்புத் தானே.

அறைமறை அயனும் மாலும் அமரரும் முனிவர் தாமும்
முறைமுறை வணங்கி ஏத்தும் முதல்வனே நமச்சி வாய.

ஆதியாய் வேதம் நான்காய் அடிமுடி தெரியா வண்ணம்
சோதியாய் நிறைவாய் நின்ற துணைவனே நமச்சி வாய.

இணையடி தேடிக் காணா ஏழுல களந்த மாயன்
கணையதா எயின்மூன் றெய்த கடவுளே நமச்சி வாய.

ஈட்டிய பொருள்போல் உன்றன் இணையடி பணிவார் துன்பம்
வாட்டிய செம்பொன் மேனி வள்ளலே நமச்சி வாய.

உமையொரு பாகம் வைத்த உம்பர்கள் தம்பி ரானே
அமைதரு மணியே முத்தே அண்ணலே நமச்சி வாய.

ஊனுமாய் உயிரும் ஆகி உள்ளுமாய் புறம்பும் ஆகித்
தாணுவாய்ச் சகத்துக் கெல்லாம் தந்தையாம் நமச்சி வாய.

எழுபிறப் பதனான் மாழ்கும் என்னுயிர்க் கிரங்கி வந்து
பழுதற ஆண்டு கொள்ளும் பரமனே நமச்சி வாய.

ஏடவிழ் கோதை மாதர் இளமுலை மயக்கப் பட்டு
நீடுதல் ஒழிக்க வல்ல நிமலனே நமச்சி வாய.

ஐயமேற் றுண்டாய் பாதம் அன்பிலேன் தலைமேல் வைத்த
செய்யனே வானோர் போற்றும் தேவனே நமச்சி வாய.

ஒன்பது வாயிற் கூட்டில் ஒடுங்குயிர் உய்யும் வண்ணம்
பொன்பொதி மலர்த்தாள் காட்டும் புனிதனே நமச்சி வாய.

ஓம்எனும் எழுத்தின் உள்ளே ஒளியதாய் விளங்கு கின்ற
வாமனே கருணை நல்கும் வள்ளலே நமச்சி வாய.

ஔவியம் பேசா வண்ணம் அடிமையைத் தடுத்தாட் கொள்ளும்
திவ்விய மணியே முத்தே தேவனே நமச்சி வாய.

அக்கினைப் பூண்டு கொண்டே அரியவெண் ணீறு பூசும்
சொக்கனே செக்கர் மேனித் தூயனே நமச்சி வாய.

கம்பமார் களிறு ரித்த கச்சிஏ கம்பா செம்பொன்
அம்பலத் தாடு கின்ற அண்ணலே நமச்சி வாய.

ஙகரம்போல் வளைந்து மூன்று நாயினேன் உணவு தேடும்
பகரொணா இன்னல் தீர்க்கும் பரமனே நமச்சி வாய.

சத்தியும் சிவமும் ஆகித் தாணுவாய்ச் சகத்துக் கெல்லாம்
முத்தியே அளிப்பாய் ஆதி முதல்வனே நமச்சி வாய.

ஞமனுடன் இந்தி ரற்கும் நாரணற் கார ணற்கும்
சமனுற முதலாய் நின்ற தாணுவே நமச்சி வாய.

இடவிய கபாலம் ஏந்தி ஏழிரண் டுலகம் எல்லாம்
தடவியும் காண ஒண்ணாச் சங்கரா நமச்சி வாய.

இணங்கிய கமலப் பொற்றாள் இருவரும் ஏத்தி நின்று
வணங்கஅம் பலத்துள் ஆடும் வானவா நமச்சி வாய.

தண்தமிழ் முனிவன் தன்னைச் சமமுறத் தென்பால் ஏவும்
அண்டரோ டயன்மால் காணா ஆதியே நமச்சி வாய.

நஞ்சணி கண்டத் தானே நதிமதிச் சடையி னானே
கொஞ்சுபச் சிளம்பெண் பாகம் கொண்டவா நமச்சி வாய.

பண்டுல களந்த மாலும் பங்கயத் தயனும் தேடிக்
கொண்டுசென் றறிய ஒண்ணாக் குரவனே நமச்சி வாய.

மங்கைஓர் பாகம் வைத்து வளர்பிறை முடிமேல் வைத்துச்
செங்கையில் மழுமான் வைத்த தேவனே நமச்சி வாய.

இயக்கரும் முனிவர் தாமும் இருகரம் குவித்து நின்று
வியக்கஅம் பலத்தில் ஆடும் விமலனே நமச்சி

அரகர சிவனே என்றும் அம்பலத் தாடி என்றும்
பரவுவார் துயரம் தீர்க்கும் பரமனே நமச்சி வாய.

இலவிதழ் மடவார் தங்கள் ஏவலுக் குரியன் ஆகி
அலமரும் என்னை ஆண்ட அமலனே நமச்சி வாய.

வளமுறு மங்கை தன்னை மற்றிடப் பாகம் வைத்தே
ஒளிமதிக் கீற்றைச் சூடும் ஒருவனே நமச்சி வாய.

அழகிய முருக னுக்கோர் ஆறுமா முகமும் கூர்மை
பழகிய வேலும் ஈந்த பரமனே நமச்சி வாய.

இளமையும் மூப்பும் இல்லா இறைவனே எம்பி ரானே
வளமையாம் கருணை மோன வள்ளலே நமச்சி வாய.

அறவனே பாதம் தேடி அன்றிரு வோரும் காணா
இறைவனே என்னைக் காக்கும் ஈசனே நமச்சி வாய.

அனந்தலில் நின்தாள் போற்றி அர்ச்சிக்கும் அடியார் தங்கள்
இனந்தனில் என்னை வைப்பாய் ஈசனே நமச்சி வாய.

கரியுரி அதனைப் போர்த்துக் கபாலமும் கையில் ஏந்தித்
திரிபுர தகனம் செய்த தேவனே நமச்சி வாய.

காலனை உதைத்த காலா காமனை எரித்த கண்ணா
பாலனைக் கறிய தாக்கும் பரமனே நமச்சி வாய.

கிளிமொழி அமுதச் செவ்வாய்க் கெவுரியைப் பாகம் வைத்த
ஒளிமதிச் சடையி னானே ஒருவனே நமச்சி வாய.

கீண்டுவெற் பெடுத்த வீரக் கேடிலா அரக்கன் தன்னை
மாண்டுக விரலால் ஊன்றும் வள்ளலே நமச்சி வாய.

குழைகுமிழ் அடரும் கண்ணாள் கோதையைப் பிரிந்த போது
பிழைசெயும் அதனைக் காய்ந்த பிஞ்ஞகா நமச்சி வாய.

கூவிளம் அறுகு தும்பை கொன்றைவெள் ளெருக்கூ மத்தை
மேவிய சடையி னானே வித்தகா நமச்சி வாய.

கெங்கையைச் சடைமேல் வைத்துக் கெவுரியைப் பாகம் வைத்தல்
அங்கணா நீதியோ சொல் ஐயனே நமச்சி வாய.

கேசவன் வணங்கிக் கண்ணாம் கேழ்கிளர் கஞ்சம் சூட்ட
ஆசியோ டாழி ஈந்த அமலனே நமச்சி வாய.

கைச்சிலை மேரு வாகக் கரியமால் பகழி ஆக
உச்சிதப் புவித்தேர் ஏறும் ஒருவனே நமச்சி வாய.

கொற்றவன் தனக்கு முன்னே குதிரையில் ஏறிக் காட்டிப்
பொற்துகில் கோலால் கொள்ளும் பூரணா நமச்சி வாய.

கோணமா மலையில் வாழும் கோதிலா ஆதி யேநீ
ஆணல்லை பெண்ணும் அல்லை அத்தனே நமச்சி வாய.

சந்திரன் விளங்கும் சென்னித் தலைவனே தம்பி ரானே
இந்திரன் இமையோர் போற்றும் இறைவனே நமச்சி வாய.

சாந்தணி முலையாள் தன்னைத் தண்புனல் எனப்பேர் மாற்றி
ஏந்துசெஞ் சடைஎம் மானே இறைவனே நமச்சி வாய.

சிரமது கையில் ஏந்திச் சீரிய முனிவர் தங்கள்
விரகினை அழித்த மேரு வில்லியே நமச்சி வாய.

சீதள கமல வாவித் திருநாவ லூரன் தன்னைச்
சாதனம் காட்டி ஆண்ட தாணுவே நமச்சி வாய.

சுத்தவெண் ணீறு பூசிச் சுடலையில் நடனம் ஆடும்
அத்தனே ஆரூர் வாழும் அண்ணலே நமச்சி வாய.

சூரியன் துயரம் தீர்த்தாய் தோன்றிமுப் புரத்தைச் சுட்டாய்
ஆரிய வெள்ளி வெற்பின் அத்தனே நமச்சி வாய.

செஞ்சிலை கையில் ஏந்திச் சிரித்துமுப் புரம்எ ரித்தாய்
தஞ்சமென் றுனை அடைந்தேன் தாணுவே நமச்சி வாய.

சேதன அடியா ரோடு திருப்பெருந் துறையில் வந்து
வாதவூ ரரசை ஆண்ட வரதனே நமச்சி வாய.

சைவனே ஐம்பு லன்கள் தமைமனம் சாரா வண்ணம்
கைவரம் அருள வேண்டும் கடவுளே நமச்சி வாய.

சொரிமலர்க் கொன்றை தும்பை சொல்லிய அறுகு தாளி
விரிமலர்ச் சடையாய் வெள்ளி வெற்பனே நமச்சி வாய.

சோலைசூழ் ஆல வாயிற் சோதியே சமணை மாய்க்கப்
பாலறா வாயி னார்க்காப் பரிந்தருள் நமச்சி வாய

தந்தையும் தாயும் இல்லாத் தாணுவே ஆண்பெண் அல்லாய்
இந்திரன் அயன்மால் போற்றும் இறைவனே நமச்சி வாய.

தாதவிழ் கொன்றை தும்பை சங்கொடு தலையும் கொண்ட
நாதனே வேதம் ஓதும் நம்பனே நமச்சி வாய.

திரிபுரம் எரித்த மூர்த்தி தென்னவன் முன்னே13 முன்னாள்
நரிதனைப் பரிய தாக்கும் நம்பனே நமச்சி வாய.

தீதிலா வாத வூரர் செய்கைகண் டுளம கிழ்ந்த
நாதனே பரனே வானோர் நண்பனே நமச்சி வாய.

துணைவனே அன்பர் தங்கள் துன்பறுத் தருளுமூர்த்தி
பணைமுலை உமையாள் பங்கா பரமனே நமச்சி வாய

தூதுசுந் தரற்காச் சென்ற சோலைசூழ் ஆரூர் ஐயா
ஆதியே அரனே வெள்ளி அசலனே நமச்சி வாய.

தென்னவ னாகக் கூடல் சேர்ந்துசெங் கோல்செ லுத்தி
அந்நகர் தன்னை ஆண்ட அமலனே நமச்சி வாய.

தேடியே இருவர் காணாத் திருவடி மனத்துள் யாரும்
நாடியே வணங்க நின்ற நம்பனே நமச்சி வாய.

தையலோர் பாகம் வைத்துச் சடையினில் கங்கை வைத்த
ஐயனே ஆரூர் வாழும் அண்ணலே நமச்சி வாய.

தொல்லுல கெல்லாம் போற்றும் சோதியே சூல பாணி
வில்லென மேரு வாங்கும் வித்தகா நமச்சி வாய.

தோத்திரம் செய்மா யற்குச் சுடரொளி ஆழி ஈந்த
ஆத்தனே அடியர் அன்பிற் களியனே நமச்சி வாய.

நஞ்சினை அருந்தி மாயன் நான்முகன் முதலோர் நாண
அஞ்செழுத் துருவ மான அத்தனே நமச்சி வாய.

நாரணன் அலரோன் இந்திரன் நாடிமுன் வணங்கி நிற்ப
ஆரணம் ஓது கின்ற ஆதியே நமச்சி வாய.

நிற்பவர் நெறியை நோக்கி நெஞ்சைவிட் டகலா தானே
கற்பனை கடந்த சோதிக் கடவுளே நமச்சி வாய.

நீறணி மேனி யானே நிமலனே அமரர் கோவே
ஆறணி சடையி னானே அண்ணலே நமச்சி வாய.

நுண்ணிடை மாது பாகா நோக்குவார் தம்மை நோக்கும்
கண்ணுதற் பரனே தேவா கடவுளே நமச்சி வாய.

நூபுர பதமா தோடு நுவலரும் சபையில் ஆடும்
மாபுரத் தவர்கள் காலா வானவா நமச்சி வாய.

நெஞ்சக மலரில் உன்னை நினைவற நினைந்த பேருக்(கு)
அஞ்சல்என் றருளிச் செய்யும் அண்ணலே நமச்சி வாய.

நேத்திரம் தன்னால் வேளை நெருப்பெழச் சுட்டு விட்டாய்
சாத்திர முனிவோர் போற்றும் தாணுவே நமச்சி வாய.

நைந்துணை நினைப்பார் பாவம் நாசம தாக்கி நிற்பாய்
பைந்தொடி பாகம் கொண்ட பரமனே நமச்சி வாய

நொந்தவர் இளைத்தோர் தம்மை நொடியள வினில்வாழ் விக்கும்
கந்தரம் கறுத்த மூர்த்தி கடவளே நமச்சி வாய.

நோக்கமூன் றுடையாய் என்னை நோக்கியே துரியா தீதத்
தூக்கத்தில் வைப்ப தென்றோ சொல்லுவை நமச்சி வாய.

நௌவியை ஏந்தும் கையால் நயமுடன் அடியார் தங்கள்
வெவ்வினை எல்லாம் தீர்க்கும் விமலனே நமச்சி வாய.

பத்தராய் பணிவார் தம்மை பதம்கொடுத் தாளும் ஐயா
சுத்தனே வேதம் சொன்ன துணைவனே நமச்சி வாய.

பாடுவார் மூவர் தம்மைப் பதங்கொடுத் தாண்ட மூர்த்தி
தேடுவார் தேடு கின்ற செம்பொனே நமச்சி வாய.

பிறையணி சடையி னானே பிஞ்ஞகா அடியார்க் கெல்லாம்
குறைவற வாழ்வ ளிக்கும் கொற்றவா நமச்சி வாய.

பீடுறப் பூசிப் பார்தம் பெருவினை அறுக்கும் மூர்த்தி
ஆடல்சேர் எருதில் ஏறும் அண்ணலே நமச்சி வாய.

புகலுறும் கல்லால் அன்பு பூண்டெறி சாக்கி யர்க்குத்
தகவுற முத்தி நல்கும் தாணுவே நமச்சி வாய.

பூசுவெண் ணீறு பொங்கப் பொருவிலா அம்மை காண
நேசமோ டாலங் காட்டில் நிருத்தம்செய் நமச்சி வாய.

பெண்ணமு தனையார் நாணும் பெட்புறு வளையும் தூசும்
எண்ணுறு பலியாக் கொண்ட இறைவனே நமச்சி வாய.

பேயுடன் காட்டில் ஆடும் பிஞ்ஞகா பெரியோர் தங்கள்
தூயநன் மனத்து ளானே சுத்தனே நமச்சி வாய.

பையர வணையில் தங்கும் பாரளந் தோற்குப் பாதி
மெய்யளித் தருள்கூர்ந் திட்ட விண்ணவா நமச்சி வாய.

பொசியுறு தேம்பூஞ் சோலைப் புகலியிற் பிள்ளை யார்க்குச்
சகியொளி முத்தின் பந்தர் தந்தவா நமச்சி வாய.

போதக மாகி வந்த புன்மைசேர் அசுரன் தன்னை
நோதக உரித்துப் போர்த்த நுண்ணியா நமச்சி வாய.

பௌவத்தில் சிலையோ டாழும் படிஅமண் செய்ய அப்பர்க்(கு)
எவ்வம தகற்றிப் பேற தீந்தவா நமச்சி வாய.

மறுவறும் ஆதி சைவ மரபிற்சுந் தரற்குத் தூதாய்ச்
செறிநிசி பரவை வாயில் சென்றவா நமச்சி வாய.

மான்மழுக் கையில் ஏந்தி வன்னியோர் பாகம் வைத்தே
ஆன்முது கேறும் சோதி ஐயனே நமச்சி வாய.

மிடற்றினில் காள கூட விடத்தினைக் கறுக்க வைத்தாய்
நடத்தினில் விருப்பம் வைத்தாய் நம்பனே நமச்சி வாய.

மீனென வந்த மாயன் விழியினை இடந்து சாத்த
ஆனதோர் மேனி நல்கும் அண்ணலே நமச்சி வாய.

முன்னமே பிரமன் தன்னை முனிந்துஓர் தலைய றுத்தாய்
என்னைவந் தாண்டு கொள்வாய் ஈசனே நமச்சி வாய.

மூர்க்கனாம் தக்கன் வேள்வி முன்புசென் றழித்து வெற்றி
மார்க்கம்கண் டிட்ட சோதி வானவா நமச்சி வாய.

மெலிவிலாத் தவத்தோர் கோபம் மேலுற முன்னாள் விட்ட
புலிதனை உரித்துச் சாத்தும் புண்ணியா நமச்சி வாய.

மேயபேர் உணர்விற்கெட்டா வெளியதாய் அணுவும் ஆகி
ஆயசிற் சொரூப மான அண்ணலே நமச்சி வாய.

மையுறு குழலாள் கூடல் மங்கையர்க் கரசி யார்முன்
செய்குறு பணிக்கு வந்த தேவனே நமச்சி வாய.

மொழிதரு நால்வர் தங்கள் முதுமறைத் தமிழ்ப்பா மாலை
ஒழிவின்றிச் சூட்டிக் கொள்ளும் ஒருவனே நமச்சி வாய.

மோகினி வடிவம் கொண்ட முகில்வண்ணன் தன்னைச் சேர்ந்து
சோகமில் ஐய னாரைத் தோற்றியோய் நமச்சி வாய.

மௌவலங் குழலார் மோக வலையறுத் துயர்சித் தாந்தச்
செவ்வையாம் முத்தி என்று சித்திக்கும் நமச்சி வாய.

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருப்பொற்சுண்ணம்

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபம்நல் தீபம் வைம்மின்
சத்தியும் சோமியும் பார்ம களும்
நாமக ளோடுபல் லாண்டி சைமின்
சித்தியும் கௌரியும் பார்ப்ப தியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. (1)

பூவியல் வார்சடை எம்பி ராற்குப்
பொற்திருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடு மின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நி லாமே
குனிமின் தொழுமின்எங் கோனெம் கூத்தன்
தேவியும் தானும்வந் தெம்மை ஆளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே. (2)

சுந்தர நீறணிந் தும்மெ முகித்
தூயபொன் சிந்தி நிதிப ரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடி எடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெ ருமான்
ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழு நற்(கு)
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்தும் நாமே. (3)

காசணி மின்கள் உலக்கை எல்லாம்
காம்பணி மின்கள் கறை உரலை
நேச முடைய அடிய வர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடும் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாசவி னையைப் பறித்து நின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. (4)

அறுகெடுப் பார்அய னும்அ ரியும்
அன்றிமற் றிந்திர னோடம ரர்
நறுமுறு தேவர்க ணங்க ளெல்லாம்
நம்மின் பின்பல்ல தெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடி
முறுவல்செவ் வாயினிர் முக்கண் அப்பற்(கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. (5)

உலக்கை பலவோச்சு வார் பெரியர்
உலகமெல் லாம்உரல் போதா தென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காணஉல கங்கள் போதா தென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்தும் நாமே. (6)

சூடகம் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நம்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராப ரனுக்(கு)
ஆடக மாமலை அன்ன கோவுக்(கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. (7)

வாட்தடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்திரு முண்டம் துதைந்தி லங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதம் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. (8)

வையகம் எல்லாம் உரல தாக
   மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
   மேதகு தென்னன் பெருந்து றையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
   செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன்அ ணிதில்லை வாண னுக்கே
   ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. (9)

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
   மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தம் சிவனொடும் ஆட ஆடச்
   செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
   பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையோ டாட ஆட
   ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. (10)

மாடு நகைவாள் நிலாவெ றிப்ப
   வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடு மின்நம்தம்மை ஆண்ட வாறும்
   பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடு மின்எம்பெரு மானைத் தேடிச்
   சித்தம் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடு மின்அம்பலத் தாடி னானுக்(கு)
   ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. (11)

மையமர் கண்டனை வான நாடர்
   மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
   அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
   போதரிக் கண்ணிணைப் பொற்றொடித் தோள்
பையர வல்குல்ம டந்தை நல்லீர்
   பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. (12)

மின்னிடைச் செந்துவர் வாய்க்க ருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொ ழியீர்
என்னுடை ஆரமு தெங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்ம கட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்த கப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. (13)

சங்கம் அரற்றச் சிலம்பொ லிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை ஆடச்
செங்கனி வாயித ழுந்து டிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராவி ரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்க ழற்கே
பொங்கிய காதலில் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. (14)

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயி னானைச்
சித்தம் புகுந்துதித் திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. (15)

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ(டு)
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலும் கண்ட றியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டும் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொ டியான்
சிவபொரு மான்புரம் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே. (16)

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்ச டைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை ஏந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. (17)

அயன்தலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி ஆடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. (18)

வட்டம லர்க்கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. (19)

வேதமும் வேள்வியும் ஆயி னார்க்கு
மெய்மையும் பொய்மையும் ஆயி னார்க்குச்
சோதியு மாய்இருள் ஆயி னார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயி னார்க்குப்
பாதியுமாய் முற்றும் ஆயி னார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயி னாருக்(கு)
ஆதியும் அந்தமும் ஆயி னாருக்(கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. (20)

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

# அபரக் கிரியை முறை

ஒருவருடைய உயிர் பிரியும் நேரத்தில் அவர் காதிலே "நமசிவாய" மந்திரத்தைத் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கவும். அருகில் திருமுறைப் பாடல்களைப் பாராயணம் செய்து கொண்டிருக்கவும். உயிர்பிரிந்தபின் உடலைத் தெற்கே தலையாகக் கிடத்தி தலைமாட்டில் குத்துவிளக்கேற்றி வைக்கவும். பூதவுடல் வெளியே போகும் வரை சுவரில் தொங்கும் படங்களைக் கழற்றிவிடுக. அல்லது பின்புறமாகத் திருப்பி விடுக. இறந்தவருடைய நிழற்படத்தை வருவோர் அஞ்சலி செலுத்துவதற்காக வெளிப்படையாக வைக்கவும். தொடர்ச்சியாக திருமுறைகள், அருட்பாடல்களை ஓதுக. நாம பஜனைசெய்க. பூதவுடல் வெளியே போகும் வரை அந்த வீட்டில் யாரும் உணவோ பானமோ அருந்தலாகாது.

**கடமை செய்பவர்:** தகப்பனுக்கு மூத்தமகனும், தாய்க்கு கடைசி மகனும், விவாகமாகி பிள்ளை இல்லாத ஆணுக்கு மனைவியும், பெண்ணுக்குக் கணவனும், விவாகமாகாத மக்களுக்கு தகப்பனோ தகப்பன் இல்லாதவிடத்து சகோதரனோ கொள்ளிவைக்கும் கடமையைச் செய்வர். மகன் இல்லாத பெற்றோருக்கு விவாகமாகாத மகள் கடமை செய்யலாம். இவ்வாறான உற்ற உறவினர்கள் இல்லாத போது வேறு உற்றார் அல்லது உறவினர்கள் கடமை செய்யலாம். பெற்றோருக்கு இறுதிக் கிரியைகள் செய்யும்போது எல்லா மகன்களும்(மகாரும்) பங்குகொள்ள, குறித்த மகன் பிரதான பங்கேற்று கொள்ளி வைத்துக் குடம் உடைப்பார்.

**கிரியைகள்:** இவை அந்திமக்கிரியை, காடாற்றுதல், எட்டு, அந்தியேட்டி, மாசிகம், மஹாளயம்,சிரார்த்தம், ஆகியனவாம். அந்திமக்கிரியை, அந்தியேட்டி சைவக்குருக்களைக் கொண்டு செய்யப்படும். வரைபடத்தில் காணுமாறு அந்திமக் கிரியை(இறுதிக்கிரியை)க்கான இடத்தில் பந்தலிட்டு வெள்ளைகட்டி, மாவிலை, தோரணம், பூக்களால் அலங்கரித்து, அரிசிமாவினால் கோலம் போட்டு பந்தலின் கழே மேற்குப் பக்கத்தில் தெற்கே தலையாகப் பூதவுடல் வைக்கப்படும். குருக்கள் வந்து பூசை ஆயத்தங்களைச் செய்து பூதவுடலின் தலைமாட்டுக்குக் கிழக்கே வடக்கு நோக்கி ஆசனத்திலிருந்து கிரியைகள் செய்வார். கடமை செய்பவர் (கர்த்தா என அழைக்கலாம்) சௌரம், ஸ்நானம் செய்து கௌபீனம், வேட்டி, சால்வை உடுத்து, சந்தியா வந்தனம் முடித்து குருக்களிடம் விபூதி வாங்கித் தரித்துக் கொண்டு பூணூல் பெற்று வலது தோளில் அணிந்து கிரியைக்கு ஆயத்தமாவார். பவித்திரம் அணிந்து சங்கற்பம் செய்து கொள்வார். கிரியை நடைபெறும்போது அன்பர்கள் அருட்பாடல்களை ஓதிக்கொண்டிருப்பர்.

குருக்கள் விநாயகபூசை கும்பபூசை பண்ணி அக்னிகாரியம் செய்து கர்த்தா

கையில் நெற்பொரி கொடுத்து அதனைப் பூதவுடலின் மேல் போட்டுத் தீபாராதனை காட்டி நமஸ்கரிக்கச் செய்வார்.( கும்பங்கள் பத்து, அட்டதிக்குப் பாலகர்,பிரதான கும்பம், உருத்திரகும்பம், என பத்து ஆகும். சுருக்கமாக இரண்டு கும்பங்களுடனும் கிரியைகள் செய்யலாம்.) உருத்திர கும்பம், சிவாக்கினி(கொள்ளி) யுடன் மயானத்துக்கு கொண்டு செல்லப்படும்.)

இதன் மேல் பூதவுடலுக்கு ஸ்நானம் செய்யப்டும். ஸ்நானத்துக்கு முன்னர் தகுதியான உற்றார் உறவினர் பிரேதத்துக்கு எண்ணெய், அரைப்பு வைப்பர். ஸ்நான முடிவில் பூசிக்கப்பட்ட பிரதான கும்பஜலத்தால் அபிஷேகம் செய்து உடல் புனிதமாக்கப்படும். பூதவுடலுக்குக்கு ஆடை உடுத்து வெள்ளைச் சீலை ஒன்றை விரித்து அதன்மேல் கிடத்தி பந்தரில் முன்பிருந்த இடத்தில் வைக்கப்படும். கர்த்தா குருக்களிடம் விபூதிவாங்கி நீர் விட்டுக் குழைத்து “மந்திரமாவது நீறு” என்ற தேவாரத்தோடு பூதவுடலுக்குக்குத் தரிப்பர். தரிக்கும் போது பூதவுடலின் வலது பக்கமாக நின்று தனது வலது கை நடுவிரல் மூன்றினாலும் முறையே முழங்கால், தொப்பூழ்,மணிக்கட்டு, முழங்கை, தோள், மார்பு, நெற்றி, சிரசு, ஆகிய இடங்களில் திரிபுண்டரமாக (மூன்று குறியாக) தரித்தல் வேண்டும். எஞ்சிய விபூதியோடு நீர் சேர்த்து உடலிலே தெளித்த பின் சந்தனம், குங்கும் (சுமங்கலிகளுக்கு) பூமாலை என்பனவற்றை அணிக.

**பின்னர் சுண்ணம் இடித்தல்:** பந்தலின் கிழக்குப் பக்கத்தில் சுத்தி செய்த இடத்தில் அரிசி பரப்பி அதில் உரல் உலக்கை வைத்து சீலைசுற்றி உரலில் மஞ்சல்பொடி இட்டு உரலைச் சுற்றி நான்கு மூலைகளிலும் நல்லெண்ணெய், அறுகு, அட்சதை, வெற்றிலை வைத்துச் சுண்ணம் இடிக்க. கிரியை செய்பவர் யாவரும் தம் வலக்கையால் உலக்கையைப் பிடித்து திருவாசகம்-திருப்பொற்சுண்ணப் பாடல்களை ஒருவர் பாட ஒவ்வொரு பாடல் முடிவிலும் ஒவ்வொரு தரம் இடித்து 20ஆம் பாடல் முடிவில் மும்முறை இடித்து நிறைவு செய்க. சுண்ணம் இடிக்கும் நேரத்தில் இறந்தவரின் பேரப்பிள்ளைகள்

பூதவுடலைச் சூழநின்று நெய்ப்பந்தம் பிடிப்பர். பூதவுடலைச்சூழ அங்காங்கு கற்பூர தீபம் ஏற்றப்படும். இடித்த சுண்ணத்தைக் கும்ப தீர்த்தம் கலந்து கர்த்தா தன் நெற்றியில் அணிந்து பிரேதத்தின் கண்களில் வைப்பர். மீதியை உடலில் தெளித்துவிடுவர். பஞ்சபுராணம் ஓதிய பின்(தகுதியுள்ள) பெண்கள் இடமாகச் சுற்றி வந்து வாய்க்கரிசி போடுவர். இறந்தவர் சுமங்கலியானால், தானியம், பூரணகும்பம், விளக்கு ஆகியவற்றைக் கொடுத்து வாங்கி வீட்டுக்குள் வைத்தல் வேண்டும். பின் தாம்பூலம் பழம் முதலிய மங்களப் பொருட்களை முந்தானையில் முடிந்து விடுக. ஆணாயின் மனைவி, மக்கள் இடமாகச் சுற்றி வந்து காலடியில் மலர் அஞ்சலி செய்து விழுந்து வணங்குவர். மனைவி தனது கழுத்திலிருந்து மாங்கலியத்தைக் கழற்றி கணவன் பூதவுடலின் மார்பில் வைப்பர்.

இதன் பின் பூதவுடலின் மேலே போடப்பட்ட சீலையால் முகத்தை மூடி கழாக விரிக்கப்பட்ட சீலையைத் தலைப்புறம் ஒரு முடியும் கால்புறம் ஒரு முடியும் போட்டு நடுவே குறுக்காகப் போடப்பட்ட மூன்று சீலைத் துண்டுகளாலும்

கட்டிப் பெட்டியுள் வைத்து மூடிப் பந்தலைவிட்டு எடுத்துச் செல்லுக. உடனேயே பந்தலின் அலங்காரங்களை கலைத்து விடுக. பூதவுடல் போகும்போது அதன் கால்மாடு முன்னேயும், தலைமாடு பின்னேயுமாய் இருத்தல் வேண்டும்.
பூதவுடல் மயானம் நோக்கிப் போகும்போது கர்த்தா குடத்தைத் தமது தோளில் சுமந்தும் இன்னொருவர் சிவாக்கினியை(கொள்ளிச்சட்டியை) த் தூக்கிக்கொண்டும் பிரேதத்தின் முன்னே செல்லுவர்.

மயானத்தில் சிதையின் மீது பூதவுடலை தெற்கே தலையாகக் கிடத்தி முகம் தெரியும்படி சீலை முடிச்சை அவிழ்த்து(தகுதியுடைய) ஆண்கள் வாய்க்கரிசி போடுவர். கர்த்தா சிதையை ஒரு தரம் இடமாகச் சுற்றிக் கால்மாட்டில் விழுந்து வணங்கி, பின் வாய்க்கரிசியும் போடுவார். பஞ்சபுராணம் ஓதிய பின் இறந்தவரின் உடலில் கட்டப்பட்ட நூல், அரைஞாண் முதலியன இருந்தால் அவற்றை அறுத்தவிடுக. கர்த்தா கும்பத்தை இடது தோளில் சுமந்தும் கொள்ளியை வலது கையில் கொண்டும் சிதையை மும்முறை இடமாகச் சுற்றி வர ஒவ்வொரு சுற்றிலும் சிரசையடையும் போது குடத்தில் ஒவ்வொரு துவாரம் செய்து அதன் வழி ஒழுகும் நீரைப் பின்னால் வருபவர்களில் ஒருவர் சிதையின் மீது தெளிப்பர். மூன்றாம் முறை முடிய, தலைமாட்டில் தெற்கு நோக்கி நின்று திரும்பிப்பாராது கொள்ளியைப் பூதவுடலின் தலையில் வைப்பர். தோளிலிருந்த குடத்தை முன்னால் போட்டு உடைத்து, அணிந்திருந்த பூணூலை அறுத்தும் பவித்திரத்தைக் கழற்றியும் கிழே போட்டு பிரேதத்தைப் பாரமலே வந்து கால் மாட்டில் விழுந்து வணங்கி தம் இடத்துக்கு வந்து ஸ்நானம் செய்வர்.

இறந்த ஒருவருக்கு ஈமக்கிரியை ஓரிருநாட்களில் செய்தல் நன்று. தகனக் கிரியைகள் முடிந்தபின் இறந்த இடத்தில் தினமும் குத்துவிளக்கேற்றி ஒரு செம்பில் தண்ணீரும் வைத்தல் வேண்டும். அந்தியேட்டி நாள்வரை இது செய்யப்படும்.

இறந்த நாள் முதலாக எண்ணப்படும் மூன்றாம், ஐந்தாம், ஏழாம் நாளில் அஸ்தி சஞ்சயனம்(எலும்பைச் சேர்த்தல்) (காடாற்றுதல், பால் தெளித்தல் என்றும் சொல்லப்படும்) செய்தல் வேண்டும். தகிக்கப்பட்ட என்பு, சாம்பரில் குறிப்பிட்டசில என்புகளை அந்தியேட்டிக் கிரியையின் பொருட்டு தனியாக வைத்துக்கொண்டு மீதமானவற்றை ஆற்றிலோ, கடலிலோ சேர்ப்பது காடாற்றுதல்.
ஐந்தாம் ஏழாம் நாள் மாலை அவர் இறந்த இடத்தில் அவருடைய நிழற்படத்தை அலங்கரித்து வைத்து, அவர் விரும்பி உண்ட சகல பதார்த்தங்களையும் படைத்து வழிபாடுசெய்தல் எட்டுக்கு வைத்தல் என்ற கிரியை.

அந்தியேட்டி, புண்ணியாகவாசனம், வீட்டுக்கிருத்தியம், ஆகியன 31ஆம் நாளில் செய்யப்படும். இவை மூன்றையும் ஒரேநாளில் செய்வது இயலாதவிடத்து அந்தியேட்டியை 30ஆம் நாளிலும் மற்றைய இரண்டையும்

31ஆம் நாளிலும் செய்யலாம். அந்தியேட்டி சைவக்குருக்களைக் கொண்டும் ஏனையவற்றைப் பிராமணக் குருக்களைக் கொண்டும் செய்யவேண்டும்.

**அந்தியேட்டி:** இறந்த 30-31 ஆம் நாளில் கடல் ஷ ஆற்றின் கரையில் பந்தலிட்டு, அலங்கரித்துச் செய்வது. குருக்கள் சிவகும்பம், வர்த்தனி கும்பம், மேலும் பத்துக் கும்பங்கள் வைத்தப் பூசிப்பார். பிரிந்த ஆவியை மந்திரமூலம் தருப்பையில் வவைழைத்து (ஆவாஷித்து) சிதாஸ்தான மேடையின் பக்கத்தில் தெற்கே தலையாகக் கிடத்தி, சுத்திசெய்து, நீறு சாத்தி பிறபூசைகளையும் செய்வார். பின் அதனைத் தகனம் செய்து, அஸ்திசஞ்சயனம் செய்யப்படும். இதன் மேல்
பாஷாண பூசை(பாஷாணம்-கல்லு): ஒரு மண்குடத்தில் கும்பம் வைத்து, ஒரு செங்கல்லில் மனித வடிவம் எழுதி அதனை மண்சட்டி ஒன்றில் வைத்து இறந்த ஆன்மாவை கல்லில் ஆவாஷித்து, அபிசேகம்,பூசை, தர்ப்பணம் செய்து பிண்டம் இட்டு வழிபட்ட பின் இவை எல்லாவற்றையும் கொண்டு சென்று நீரில் இறங்கி முறையே பிண்டம்,கும்பம்,பா'ாணம்,அஸ்தி ஆகியவற்றை நீரில் சேர்த்து கர்த்தா கரையேறுவார்.

**வீட்டுக்கிருத்தியம்:** இது பிராமணக் குருக்களைக்கொண்டு செய்யப்படுவது. இதில் புண்ணியாகவாசனம், ஏகோதிட்டம், முதலாவது மாசிக சிராத்தம் முதலியன இடம்பெறும்.

**புண்ணியாக வாசனம்:** ஆசௌச நீக்கத்துக்காகச் செய்யப்படுவது. ஆசாரியார் விநாகபூசை, வருணகும்ப பூசை செய்து பஞ்சகௌவியம் தருவார். அதனை யாவரும் பருகித், தம் தொடக்கையும், வீடு முற்றிலும் தெளித்து வீட்டு தொடக்கையும் கழிக்கவேண்டும். இதன்பின்னரே வீட்டில் சமையல் தொடங்கப்படும்.

**ஏகோதிட்டம்:** அந்தணர் ஒருவரை வரவழைத்து பூசையிடத்தில் மேற்குமுகமாக இருத்தி, இறந்தவரை மந்திரத்தால் அவரில் எழுந்தருளவேண்டுக. அவருக்கு எண்ணெய், அரைப்பு கொடுத்து ஸ்நானம் செய்ததாகப் பாவித்து, சந்தனம், பூ, வஸ்திரம் சாத்தி, குடை, செருப்பு,பாய், விளக்கு, அரிசி காய்கறி முதலான வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் தானம் செய்து பூசித்து வழியனுப்புக.

**சிராத்தம்:** ஆசாரியார் செய்யும் பூசைகளின் பின் தர்ப்பணம்( எள்ளும் நீரும் இறைத்தல்), பிண்டம்(அரிசிமா, எள்ளு,வாழைப்பழம் முதலானவை சேர்த்துப் பிசைந்து) சமர்ப்பித்து, நைவேத்தியம் படைத்து வழிபடுக. ஆசாரியாருக்கு தானம் தட்சணை கொடுக்கவும்.

**மாசிக சிராத்தம்:** அந்தியேட்டியின் பின் ஒவ்வொரு மாதமும் இறந்த திதியிலும், விசேடமான வேறு நாலு திதிகளிலும் மாசிக சிராத்தம்

செய்யவேண்டும். அவ்வப்போது இவற்றைச் செய்ய இயலாதவிடத்து அப்பதினைந்து மாசிக சிராத்தங்களையும் ஒருசேர ஆட்டைத் திவசத்தின்போது செய்யலாம்.

**ஆட்டைத்திவசம்:** (ஆண்டு + திவசம்) ஒருவர் இறந்து ஓராண்டு நிறைவில் இறந்த மாதம்,பட்சம்,திதியில் செய்யப்படும் சிராத்தம். ஆசாரியார் புண்ணியாகவாசனம் முடித்து பூசை கிரியைகள் செய்வார். தர்ப்பணம், பிண்டம் சமர்ப்பித்ல் முதலியன செய்யப்படும். பிண்டம் இடும்போது, இறந்தவர் தந்தையாயின் தந்தை, பேரன், பீட்டன் ஆகியோருக்கு ஒவ்வொரு பிண்டமும் தம் வம்ச முன்னோர்கள் யாவருக்கும் பிண்டமுமாக நான்கு பிண்டங்கள் வைக்கப்படும். இறந்தவர் தாயென்றால் தாயார், தந்தையின் தாயார்,பேரனின் தாயார், வம்சமுன்னோர் ஆகியோருக்காக நாலு பிண்டங்கள் வைக்கப்படும். தாயின் சிராத்தத்தின் போது, தந்தை உயிரோடிருந்தாலோ, தந்தையின் சிராத்தத்தின் போது பேரன் இருந்தாலோ இந்தவருக்கான ஒரு பிண்டமே வைக்கப்படும். இவ்வாறு பிண்டம் இட்டபின் நைவேத்தியம் படைத்து வழிபாடு செய்து ஆசாரியாருக்கு தானம், தட்சணை கொடுக்கவும்.

**குறிப்பு: திதி நாளில் (அதிதிகளுக்கு) பிச்சையிடுதல் ஆகாது.**

இதன் பின்னர் இறந்தவர் தந்தை ஆயின் மகார்(மகன்மார்) அமாவாசை விரதமும் தாயாகவிருந்தால் பூரணை விரதமும் அனுட்டிப்பர். மாதந்தோறும் இவ்விரதங்களை அனுட்டிக்காதவர்கள் ஆடி அமாவாசை, சித்திரைப்பூரணை விரதங்களையாவது கட்டாயமாக அனுட்டிக்கவேண்டும்.

வருடந்தோறும் புரட்டாதி மாதத்தில்வரும் மஹாயள சிராத்தமும் இறந்தமாதம் இறந்த திதியில் வருடசிராத்தமும்(திவசம்) செய்தல் வேண்டும். தீர்த்தயாத்திரை தலயாத்திரையின் போது எந்நாளாயினும் அங்கு பிதிர்களுக்காகத் தர்ப்பணம் செய்தல் புண்ணியமாகும். அயோத்தி, மாயா, மதுரா, காசி, காஞ்சி, அவந்திகா, துவாரகா ஆகிய ஏழுஸ்தலங்களில் செய்யும் தர்ப்பணம் பிதிர்களுக்குச் சிறந்த பலனைத்தரும்

## ஆசௌசம்

இது ஜனனாசொளசம், மரணாசௌசம் என இருவகைத்து.

ஆசௌசம் உள்ளவர்கள் அது முடியும் காலம் வரை கோவிலுக்குப் போவதும்,மங்கள காரியங்களில் பங்குகொள்வதும் ஆகாது. கொள்ளிவைத்தவர்களும், இறந்தவரின் பிள்ளைகளும் ஆட்டைத்திவசம் முடியும்வரை விவாகம் செய்தல், புதுமனைபுகுதல், போன்ற விசேட மங்கள

காரியங்கள் செய்தல் ஆகாது. ஒருவர் இறந்தால் அவருடைய மனைவிஷ கணவன்,பிள்ளைகள்,பிள்ளைகளின் தந்தைவழிப் பாட்டனும், சகோதரர்களும் இவ்வாறான ஆண்வழி மூதாதையர்கள்,வழித்தோன்றல்களும்,பிரேதத்துக்கு அரைப்பு எண்ணெய் வைத்தவர்கள்,வாய்க்கரிசி போட்டவர்கள் ஆசௌசம் உள்ளவீட்டில் உணவோ பானமோ அருந்தியவர்களும் ஆசௌசம் உடையவர்களாவர். இவர்கள் யாவரும் புண்ணியாகவாசனம் முடியம்வரை தொடக்குக் காத்தல்வேண்டும். பெண்களைப்பொறுத்தமட்டில் மணமாகாத பெண் ஆண்பிள்ளைபோலக் கருதப்படுவர். மணமான பெண் தன் கணவனின் ஆசௌசங்களைக் காக்கக் கடவர்.உதாரணமாக மண்மான பெண்ணின் தந்தை இறந்தால் அவருக்கு ஆசௌசம் இல்லை. அவரின் கணவனின் தந்தை இறந்தால் ஆசௌசம் உண்டு.

பொதுவாகப் புண்ணியாகவாசனம் 31 ஆம் நாளில் செய்யப்படுவதானாலும் பிராமணர்களுக்குப் பத்தாம் நாளிலும், விசேட தீட்சை பெற்றவர்களுக்கு 16 ஆம் நாளிலும் குறிப்பிட்ட சில தொழில்களைச் செய்வோருக்கு 31 ஆம் நாளுக்கு முன்பும் செய்ய விதியுண்டு.

**எண்ணெய் அரைப்பு வைக்கவும்,வாய்க்கரிசி போடவும் தகுதியானோர்:** தந்தை,தாயாரை இழந்த ஆண்களும் கணவனை இழந்த பெண்களும் ஆவார்.எல்லோருமே தமது பெற்றோருக்கு இவற்றைச் செய்யக் கடமைப்பட்டுள்ளனர்.

## பஞ்சமி தோஷம்:

அவிட்டம், சதயம். பூரட்டாதி, உத்தரட்டாதி,ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் ஒருவர் மரணமானால் முறையே 6,6,3,3, ஒன்றரை மாதம் தோ'ம் எனக் கூறப்படுகிறது. சாந்தி செய்து நீற்றுப் பூசினிக்காயை வீட்டில் நேர்ந்து கட்டுக.

## அவமிருத்து:

இயற்கையல்லாத மரணம் (அவமிருத்து) அடைந்தவர்களுக்கு மரணக் கிரியைகள் செய்யாமல் பூதவுடல் தகனம் செய்யப்படும். ஆறுமாதம்ஆசௌசம். ஆறுமாத முடிவில் தருப்பையில் ஆவியை ஆவாஹனம் செய்து அந்தியேட்டி முதலியன செய்யப்படும்.

## கிரியைகளின் பலன்

| | | |
|---|---|---|
| அபரக்கிரியை | - | இந்தவர் சிவபதம் பெற உதவும் |
| சுண்ணம் இடித்தல் | - | சரீர பரிசுத்தி |
| அஸ்தி சஞ்சயனம் | - | புண்ணிய தீர்த்த பலன் |

| | | |
|---|---|---|
| அந்தியேட்டி | - | மந்திரம்,கிரியைகளில் ஏற்பட்ட குறைகள் நிவிர்த்தி |
| பா'ாண பூசை | - | ஆன்மா கல்லாய் கிடவாது காத்தல் |
| ஏகோதிட்டம் | - | பிரேத தத்துவ நீக்கம் |
| மாசிக சிராத்தம் | - | சரீர வளர்சசி |
| தான தருமங்கள் | - | புண்ணியப் பேறு |
| சிராத்தம் | - | ஆன்மாவுக்கு உணவு |
| எள் | - | பாவ நீக்கம் |

கிரியைகள் செய்யும் கர்த்தா நீண்ட ஆயள்,சுகம்,சந்ததி வித்தி, சிவகிருபை இவற்றைப் பெறுவார்.

இறந்த ஒருவரின் ஆன்மா, தான் செய்த நல்வினை,தீவினைகளுக்கேற்ப உடனேயே வேறு பிறப்பு(தூலதேகம்) எடுக்கலாம். அல்லது ஆவியாகவே (சூக்கும தேகம்) இன்ப துன்பங்களை அனுபவித்துத் திரிந்து,குறித்த காலத்தின் பின் பிறவி எடுக்கலாம். அபரக் கிரியைகள் செய்வதன் மூலம் அதன் தீவினைப் பலனைக் குறைத்தும் நல்வினைப் பலனை அதிகரித்தும் உபகாரம் செய்யலாம். அவ்வப்போது செய்யப்படும் சிராத்தம், தர்ப்பணம், பிண்டம் ஆகியவற்றால் பிறவி எடுத்திருந்தாலும், ஆவிநிலையி லிருந்தாலும்
அவ்வான்மாவுக்கு நற்பலன் கிடைக்கும். வாழ்நாளில் ஒருவருக்கு ஏற்படும் அதிட்டம், துரதிட்டம் என்பன அவரின் முற்பிறப்பு மக்களால், சந்ததியினரால் செய்யப்படும், செய்யத்தவறும் சிராத்தம் முதலியவற்றால் ஏற்படுகின்றன. தம்மைப் பெற்ற தாய் தந்தையர் உயிரோடிருக்கும்போது அவர்களைப் பேணிப் பாதுகாப்பது எவ்வளவு அவசியமான கடமையோ, அவ்வளவு அவசியமானவையே அவர்கள் இறந்தபின் செய்ய வேண்டிய கடமைகளும்.

தாய்தந்தையரை இழந்த ஒவ்வொரு மகனும் தன் வாழ்நாள் முழுவதும் பெற்றோருக்கான சிராத்தம் செய்தல் அவரவர் கடமையாகும்.

**"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான்என்றாங்கு**
**ஐம்புலத்தாறு ஓம்பல் தலை."**

என்று திருவள்ளுவர் பிதிர்களை முதலில் சுட்டியிருத்தல் கவனிக்கத்தக்கது.

- - - - - - - - -

## கிரியை மண்டப அமைப்பு

1) பூதவுடல்
2) ஸ்நபந கும்பம்
3) பஞ்சகௌவியம்
4) உருத்திரகும்பம் (மயானத்திற்கு)
5) ஓமகுண்டம்
6) குருக்கள்
7) உரல்
8) உலக்கை
9) கர்த்தா



## ஈமக்கிரியை செய்வதற்கு தேவையான பொருட்கள்.

| | | | |
|---|---|---|---|
| மஞ்சள்மா | - | 100 கிராம் | |
| அரிசி மா | - | 100 கிராம் | |
| நல்லெண்ணெய் | | சிறியபோத்தல் | |
| சிகைக்காய் அல்லது அரப்பு | - | 100 கிராம் | |
| நெல்லு | - | 100 கிராம் | |
| பச்சை அரிசி | - | 1 கிலோகிராம் | |
| எள்ளு(கறுப்பு) | - | 100 கிராம் | |
| நெற்பொரி அல்லது அரிசிப்பொரி | - | 100 கிராம் | |
| சமித்து | - | 1 கட்டு | |
| நெய் | - | 1 ரின் சிறியது | |
| தேங்காய் | - | 3 முடியுடன் | |
| நூற்பந்து-வெள்ளை | - | 1 | |
| பன்னர் | - | 1 | |
| மண்பானை | - | 1 | |
| வாழைஇலை | - | 2 | |
| மாவிலை | - | 15 | |
| வெற்றிலை | - | 30 | |
| பாக்குச் சீவல் | - | 50 கிராம் | |
| வாழைப்பழம் | - | 6 | |
| எலுமிச்சம்பழம் | - | 2 | |
| கற்பூரம் | - | 1 பெட்டி | |
| சாம்பிராணி-ஊதுவர்த்தி | - | 2 பெட்டி | |
| பால் | - | 1 சிறியது | |
| இளநீர் | - | 1 | |
| குத்துவிளக்கிற்கு எண்ணெய் | - | 1 சிறியது | |
| விளக்கிற்குத் திரிநூல் | | | |
| விபூதி | - | சிறிதளவு | சந்தணம்-சிறிதளவு |
| குங்குமம | - | சிறிதளவு | |
| கும்பத்துப் பட்டு-சிவப்பு | - | 1 | |
| வெள்ளைத்துணி | - | 3 மீற்றர் | |
| குருக்கள் வே'டிசால்வை | - | 1 | |
| சந்தனக்கட்டைகள் | - | 3துண்டுகள் | சில்லறைக் காசுகள் |
| மணல் | - | சிறிதளவு | |

கடமைசெய்பவர்களுக்கு வேட்டிசால்வைகள் பூமாலைகள்- விருப்பம்போல்

பூக்கள் - 4கட்டு

**பேரப்பிள்ளைகள் இருப்பின் நெய்ப்பந்தங்கள் அல்லது மெழுகுவர்த்திகள்**

**குத்துவிளக்கு -1 (பாவனைக்கு) பாவனைக்கு தட்டுக்கள் -2**

**பெண் சுமங்கலியாக சிவபதம் அடைந்தால்**

அகல் விளக்கு -1 எலுமிச்சைப் பழம்-1

மஞ்சல் கிழங்கு -1 சிறிய தட்டு -1 நெல்லு -சிறிதளவு

## திவசம் செய்வதற்கு தேவையான பொருட்கள்.

| | | |
|---|---|---|
| மஞ்சள்மா | - | 100 கிராம் |
| அரிசி மா | - | 250 கிராம் |
| உழுந்து மா | - | 250 கிராம் |
| எள்ளு | - | 100கிராம் |
| சர்க்கரை | - | 100 கிராம் |
| தேன் | - | சிறியளவு |
| நெய் | - | சிறியளவு |
| பால் | | |
| தயிர் | | |
| தேங்காய் | - | 5 |
| பச்சை அரிசி | - | 1 கிலோகிராம் |
| வெற்றிலை | - | 25 |
| பாக்குச் சீவல் | - | 50 கிராம் |
| வாழைப்பழம் | - | 6 |
| நூற்பந்து | - | வெள்ளை 1 |
| வாழைஇலை | - | 5 |
| கற்பூரம் | - | 1 |
| சாம்பிராணி-ஊதுவர்த்தி | - | 2 பெட்டி |
| குத்துவிளக்கிற்கு எண்ணெய்- | | 1 சிறியது |
| விளக்கிற்குத் திரிநூல் | | |
| விபூதி | - | சிறிதளவு |
| சந்தணம் | - | சிறிதளவு |
| குங்குமம் | - | சிறிதளவு |

சில்லறைக் காசுகள்    பூக்கள் - 2கட்டு

**தானத்திற்கு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | - | 1 | இஞ்சிக்கிழங்கு | - | 1 |
| அரிசி | | | மரக்கறிவகை | | |
| வேட்டி சால்வை | | | | | |

**படைப்பதற்கு**

| | |
|---|---|
| சமைத்த உணவு வகை | பலகாரங்கள் |
| பழவகைகள் | இளநீர் |

**பாவனைக்கு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| குத்துவிளக்கு | - | 2 | செம்பு | - | 1 |

## வீட்டுக்கிருத்தியம் செய்வதற்கு தேவையான பொருட்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மஞ்சள்மா | - | 100 கிராம் | | | |
| அரிசி மா | - | 250 கிராம் | | | |
| உழுந்து மா | - | 250 கிராம் | | | |
| எள்ளு | - | 100கிராம் | | | |
| சர்க்கரை | - | 100 கிராம் | | | |
| தேன் | - | சிறியளவு | | | |
| நெய் | - | சிறியளவு | | | |
| பால் | | | | | |
| தயிர் | | | | | |
| தேங்காய் | - | 5 | | | |
| பச்சை அரிசி | - | 1 கிலோகிராம் | | | |
| வெற்றிலை | - | 25 | | | |
| பாக்குச் சீவல் | - | 50 கிராம் | | | |
| வாழைப்பழம் | - | 6 | | | |
| நூற்பந்து | - | வெள்ளை 1 | | | |
| வாழைஇலை | - | 5 | | | |
| கற்பூரம் | - | 1 | | | |
| சாம்பிராணி-ஊதுவர்த்தி | - | 2 பெட்டி | | | |
| குத்துவிளக்கிற்கு எண்ணெய்- | | 1 சிறியது | | | |
| விளக்கிற்குத் திரிநூல் | | | | | |
| விபூதி | - | சிறிதளவு | | | |
| சந்தணம் | - | சிறிதளவு | | | |
| குங்குமம் | - | சிறிதளவு | | | |
| சில்லறைக் காசுகள் | | | பூக்கள் | - | 2கட்டு |

**தானத்திற்கு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | - | 1 | இஞ்சிக்கிழங்கு | - | 1 |
| நல்லெண்ணெய் சிறியபோத்தல் | | | | | |
| சிகைக்காய் அல்லது அரப்பு | - | 100 கிராம் | | | |
| அரிசி- | | | மரக்கறிவகை | | |
| சேலை அல்லது வேட்டிசால்லை | | | செம்பு | - | 1 |
| விளக்கு | - | 1 | குடை | - | 1 |
| மிதியடி | | | பாய் | - | 1 |

**படைப்பதற்கு**

| | |
|---|---|
| சமைத்த உணவு வகை | பலகாரங்கள் |
| பழவகைகள் | இளநீர் |

**பாவனைக்கு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| குத்துவிளக்கு | - | 2 | செம்பு | - | 1 |

## Hindu Funeral and Post-Funeral Rites (AparaKriyai System)

*Within Hinduism there are a number of sects, subsects, and regional variations with differing beliefs.*

*The Hindu/ Saiva funeral rites vary according to sects and circumstances of the family and variety of other elements.*

*Here is an overview of some standard practices we might see in a Sri Lankan Saiva / Hindu funeral tradition.*

When an immortal soul shows signs of exit from its mortal remains, a next-of-kin should continuously repeat the holy manthra "Namasivaya" into the ear of the departing soul. And someone else should keep singing Thirumurai hymns. Once life finally departs, place the head of body towards the southern direction and keep a lighted lamp near the head until the dead body is taken away. Remove all pictures and images hanging in the wall in the room where the body is kept or turn them over or cover them. Keep reciting Thirumurais and hymns. Keep repeating Nama Bhajana until the corpse is taken away. Generally, you are not supposed to cook any food in the house until the corpse is taken for cremation.

### The Kartha The performer of the rites

The list of eligible persons who should perform the final rites that has been practised in our tradition is presented. For the father the eldest son, for the mother the youngest son, for a married man without progeny his wife, for a married woman her husband, for unmarried children the father and in case father is dead his/her brother, is obliged to light the pyre, for a parent without a son, an unmarried daughter can fulfil the obligation. Where none of the relatives is present, other relatives can do it. When last rites are done, all sons (including son-in-law) should participate, but the particular son should carry out the obligation and light the pyre after piercing the water pot.

### Rituals

Some of the last rites are, disposing of the ash (Kadathu) day, or on Antyeshti (31st day) ceremony, Masikam, Mahalayam and Shraddham (annual offering). Last rites of Kadathu and Anthyeshti are done under the direction of a Saiva Gurukkal. As outlined in the map, funeral rites (final rites) must be done in an enclosure constructed with white cloth, decorated with mango leaves, thoranam and flowers, kolam with rice flour (optional) and in the enclosure on western side, the corpse must be laid with head in the direction of south. The priest will do all the necessary arrangements for the rituals seated facing north near the west of the corpse. The performer (karthar) must shave, take a bath,

wear a Veshti and the get the holy ash from the priest and wear it along with the holy thread given by the priest on the right side of the body and prepare himself for the ritual ceremony. Make himself pure and perform Sankalpam (Objective of the ritual). While the rituals are going on, relatives should chant the hymns.

The priest performs Vinayakar Pooja, Kumbha Pooja, lighting fire, give the performer rice puffs to be sprinkled on the corpse and perform Deeparadhanai and prepare him to do mental worship. There are ten Kumbhams used for the rituals. One is the main Kumbha. Second one is the RudraKumbha and in the rest eight kumbhams eight gods which protect the eight directions are invoked. Kumbhams is made up of ten - (In a simple format only two are used) . Rudra Kumbham should be taken along with the lighted stick ( kolli).

The kith and kin will anoint arapu and oil to the physical body of the person who had his last breath. The body will be bathed with the holy water from the main Kumbham to make it pure. The Kartha (The person who does the rituals) will receive Vibhuthi from the priest and mix with water and anoint the corpse reciting the holy Devaram" ManthiramavaduNeeru". While doing this he must stand on the right side of the corpse, with the three fingers of his right hand smear the pasted holy ash at the knee, umbilical cord spot, joints of the palm, arms joint, shoulders, chest, forehead and head respectively in three lines of symbolic significance (Tripundram). With the remaining paste should be dissolved in water and must be sprinkled over the body of the corpse and adding Chandanam , Kumkumam, a garland of flowers must be worn.

**After preparing Sunnam**

At the eastern side of the enclosure, after the due cleansing of the area, at one spot, rice is spread, a mortar and pestle with a piece of cloth wound around it, is used to fill with turmeric powder, in the four corners inside of the mortar, gingelly oil, arugampul , akshathai and betel leaves must be used to prepare sunnam. The performer must hold the pestle with his/her right hand and while one recites Thiruvachakam-Thirupotsunnam, at the end of each verse, must grind with the pestle. At the end of the 20th verse, he must grind with the pestle three times and complete the ritual. At the time of preparing sunnam, the grandchildren of the departed soul must surround the corpse holding ghee lamps. Camphor is lit around the corpse about this time. The prepared sunnam is mixed with the holy water from the kumbham and the performer will wear it on his forehead and place it on the closed eyes of the corpse. The remaining sunnam is sprinkled over the body of the corpse After reciting Panchapuranam, women relatives will walk round on the left of the corpse and place rice into the mouth of the corpse (This is called Vaakkarisi). If the departed is a married woman with husband living, cereals, Poornakumbham and lamp must be given and taken back into the house. After that let them tie the auspicious items like betel and areca nut and fruits in the fore cloth of the saree. If the departed is a male, children must walk on the left and place flowers at the feet and worship the departed soul

as a tribute. The wife will remove the Mangalyam (sacred thali) from her neck and place it on the chest of the corpse. Thereafter the performer must carry the pot filled with water with mango leaves on the top with the whole coconut holding the pot using the left hand and the lighted stick in the right hand keeping it at the back of his body and circumambulation should be done anti clockwise three times. When approaching the corpse for the first time, a hole is made in the water pot and when water spills out, the water is sprinkled on the corpse.

At the end of third round, standing, facing the south near the head of the corpse, the performer will place the kolli (lighted stick) near the head of corpse without looking at the corpse. Thereafter the water pot must be broken following this the performer without looking at the body must go to the feet of the corpse remove the sacred thread worn and break it and put into the coffin. Likewise remove the Darbhai from the finger, break it and put it inside the coffin. Once again without looking at the corpse the performer must postulate and worship at the feet of the corpse. Then the white sheet used at the top of the Pandhal is removed and placed on the corpse in order to cover it. Then the coffin is closed by the funeral directors. Immediately disband all the decorations in the enclosure. When the corpse leaves, the feet must go in the front.

It is better if the last rites to a dead person are performed at the earliest. After cremation of the body, at the home of the departed person, a lamp must be lit daily and water/ coconut water be kept daily until Anthyeshty ritual.

From the day of demise, the third, fifth and seventh day, disposal of Asthisanchayanam (The collection of the bones) must be performed. This is called kadattu, sprinkling of milk, etc are done. On the third, fifth or seventh day counting either from the date of death if it is not practicable then counting from the date of cremation a further ceremony is held which is called in Tamil EttuSealavu meaning a ceremony that needs to be done within eight days. This takes the form of cooking and offering the usual and favourite food consumed by the dead person during his/ her lifetime. This offering is for the departed soul. Relatives and friends would thereafter partake in food that was cooked for the purpose. A photograph should be placed in a chair with a garland and dressed with his/ her clothes.

The food and drinks the dead person relished during his lifetime must be offered to the departed soul. This is called the 8th day ceremony.

Anthyeshty, Punyahavachanam and domestic rituals etc must be done on the 31$^{st}$ day. If it is not possible to do all these in one day, Anthyeshty can be done on the 30$^{th}$ dayand the other two done on the 31$^{st}$day. Anthyeshty must be done by a Saiva Gurukkal and the other two by a Brahmin priest,

**Anthyeshty ritual**

The Anthyeshty should be done after 29-31 days of the demise near the sea or river. An enclosure is constructed and decorated by the Saiva Gurukkal who will install Sivakumbham, VardhaniKumbham and ten other Kumbhams for worship. The departed soul is invoked by reciting appropriate manthra into a platform of Dharbai grass, with the head facing the south direction, sanctified and smearing holy ash and other poojas. Later the platform is cremated and kadathu ceremony is done for the corpse. In addition, a Paashanapooja- a Kumbham is installed, a human form is drawn on a brick and kept in an earthen pot, the departed soul is invoked, abhishekam, pooja, offering etc is done and Pindam is offered and the Pindam, Kumbham, Paashanam and Asthi are dissolved in the river or whichever waterbody is available.

**Rituals at home**

This is done by a Brahmin priest. In this Punyahavachanam, Ekodhishtam, First Maasika, Srardham and other rituals are performed.

**Punyahavachanam**

This is done for removal of Aashoucham (defilement). The priest will perform Vinayakar Pooja, VarunaKumbha Pooja and give you PanchaGavyam (A mixture of milk, curd, ghee , cow dung and cow urine). Everybody must drink it and get rid of all defilements. The PanchaGavyam must be sprinkled in the house to get rid of all defilements. Only after this you can start cooking in the house.

**Ekoddhishtam**Anthyesthy - Vettukkirtthit

A Brahmin priest is invited. He should be seated facing the west and the departed soul must be invoked in him through reciting appropriate Manthra. It is believed that the Departed soul would enter his body through the air. Gingelly oil, Siakkai powder (Powder to clean the body) are given to him. After the oil bath he is given Veshti along with AngaVastra, saffron powder, flowers, cloths, umbrella, footwear, mat, lamp, rice, vegetables and necessary items along with the Dakshina. He should be worshipped and to be sent back after the prayers. The twelve months Sraddham is done at the same time.

**Shraddham**After the Brahmin does the necessary poojas, Tarpanam offering of Sesame seeds (black) , along with the water , Pindam - mixture of rice flour, sesame seeds, banana fruit and Naivedyam (sweetmeats, fruits,etc) is offered along with the Dakshina - gift of cash must be given to the priest.

**Maasyam Monthly shraddam** shodasham- sisxteen (optional)

After the Anthyeshty ceremony, for every month on the Thithi on which the soul left this mundane world and four other thithis, monthly Shraddham must be done. This is known as Maasyam . Or this can be done on the occasion of doing the Aandu Divasam.

**Addai Divasam** (Aandu Divasam )

On completion of one year after the month of demise, PakshamThiithi, Shraddham is done by the priest after completing Punyahavachanam and the poojas rituals. Tarpanam, Pindam offering will be done. While offering the Pindam must be offered to the father, grandfather, great-grandfather of the deceased each and all those forefathers of the family four pindams. While doing Sraddham for mother, if the father is living, while doing Shraddham his grandfather is living, only one pindam is offered. After offering Pindams, Naivedyam must be offered and worship done. The priest should be honoured with the Dakshina.

NOTE: Alms should be done on the Thithi day

After this, if the deceased was father, sons must observe AmavasaiViradam and if the deceased was mother full moon day Viradam must be observed. If the Viradam is not observed monthly, they must compulsorily observe AdiAmavasai and ChithraPournamiViradams

Every year in September MahalayaShraddham and on the Thithi of the year following the year of death annual Shraddham (Divasam) must be done. If you are on pilgrimage to holy rivers or holy places like Ayodhya, Maya, Mathura, Kashi, Kanchi, Avanthika and Dwaraka and others doing Tarpanam to ancestors will make our forefathers happier.

**Aashoucham (Defilement)**

This is of two types. One is due to the birth known as VruddhiAshoucham and the other due to the death known as KshayaAshoucham .

Those who are infected with the Ashowcham , should not visit temples and not participate in auspicious events. Those who did kolli ritual and children of the deceased should not until Addaithivasam marry, do house warming ceremony and such auspicious matters. Ashoucham attaches to those of the deceased such as his wife, husband, offspring, grandfather from the lineage of father, male line ancestors and descendants, those who anointed oil to a corpse, offered Vaakarisi , those who consumed food or drinks of those to whom Ashoucham attaches are treated as subject to Ashoucham . All these people must observe Ashoucham until the Punyahavachanam is performed. As far as females are concerned, an unmarried woman is treated like a male. Married women must observe that of their husbands.If the husband's father is deceased, Ashoucham will attach to her.

In general, though Punyahavachanam is done on the $31^{st}$day, for brahmins it is on the 11 th or the $13^{th}$ day, those who had special Deeksha on $16^{th}$day and those who are in particular occupations on a day before the $31^{st}$ day.

Those who are entitled to anoint oil and offer Vaakarisi are males who lost their parents and females who lost their husbands. All are obliged to do these for their parents.

**Danishta Panchami shanthi**

If one dies on Avittaam ( Dhanishta) , Sadayam, Poorattadhi, Uththarattaadhi and Revathy Nakshathram , they will be infected with Dosham that attaches for 6,6,3,3, 1 ½ months respectively. Special Shanthi Pooja should be performed and have a white pumpkin hung inside the house

**ApaMuuthyu (sudden deaths)**

Those who meet unnatural deaths will be cremated without performing funeral rites and rituals. Ashoucham attaches for six months. At the end of six months the soul is invoked on Darbhai and Anthyeshti done.

**The Relevance of the rituals**

AparaKriyai  Those rituals done after the soul leaves the physical body. The deceased attains Siva Padam

Sunnam Grind  The powder is prepared to apply on the body of the deceased one to clean it. The body offered to the Lord. Hence, it has to be cleaned before the final offering in the fire. .

AsthiSanchayanam  "Asthi" means the bones and "Sanchayanam" means collection. The bones and the Ashes are collected and left in the rivers

Anthyeshty  - "Anthya " means the end and "Ishty " means the fire sacrifice. Our physical body is given by God to live in this mundane world and we have to give it back in the holy fire before we leave. Hence, the ritual done for the dead are known as Anthyeshty.

Pashana Pooja  To invoke the Athma in the stone temporarily till it proceeds with it's travel in the subtle form for a period of one year

Ekodhdhishtam  Elimination of corpse elements ( PrethaNivruththithvam)

MasikaShraddham  The soul takes one year to complete his journey towards the PithruLoka . Hence, every month the MaasikaShraddham is performed to give the energy to the soul for its travel.

Gifts and donations  Punya - means Good deeds which brings Good luck. Any person cannot carry his wealth with him during his final journey but he will be accompanied with his Punya (Good deeds) andPaapa (Bad deeds) in the subtle form. By giving away the Daanam we make others happy and which blesses us with Punya in the births to come.

Sesame seeds - Removal of sins

Shraddham That ritual which is done with absolute dedication and faith. Shraddha means Dedication. By offering the Shraddham, we are able to repay our thankfulness to our forefathers and their happiness blesses us with peace and prosperity. At any point of time the Shraddham should not be left out as we are greatly indebted to our parents. Our presence in this mundane world is because of them. Hence, it is the greatest duty one should do after their physical departure from this world.

Those who perform these rites and rituals will have longevity, happiness, proliferation of progeny along with the grace of Lord Shiva.

The departed soul will take birth according to the good and evil actions by taking a corporeal birth or will take subtle birth (Sookshma body) and wander having enjoyment and suffering and take birth at a particular time. By doing Aparakiriyas, it can minimise the results of its evil actions or enhance the results of good actions. By doing Shradhdham, Tarpanam, Pindam, even if it had taken another birth, it will reap good results as Athma. In life good luck and bad luck are caused by the performance or neglect of Shraddham and other Kriyas by those children in previous birth or descendents. While it is very important to cherish and protect parents while living, it is equally important to do all rites and rituals after their demise.

It is the duty of all persons who lost their parents to perform Shraddham during his whole lifetime.

It is noteworthy that Saint Thiruvalluvar has emphasized our duty to all our ancestors in the following Kural:

**"Thenpulathar, theivamvirunthuoccal than entranku**
**Aimpulatharuompalthalai "**

it means:

"It is the foremost duty of every householder to cherish and sustain our forefathers, gods, unexpected guests, next-of-kin and himself"

**Structure of enclosure**

1. Corpse
2. Snapanakumbhams
3. PanchaGavyam
4. RudraKumbham (to crematorium)
5. HomaKundam (kindling fire)
6. Gurukkal

7. Mortar
8. Pestle
9. Kartha ( Doer of the rituals)

Materials necessary to do final funeral rites and rituals

| | |
|---|---|
| Turmeric powder | 100 gr. |
| Rice flour | 100 gr |
| Gingelly oil | 1 small bottle |
| Cleaning powder (Arappu) | 100 gr. |
| Paddy | 100 gr |
| Raw rice | 1 Kg. |
| Sesameseeds (black) | 100 gr |
| Roasted paddy or rice | 100 |
| Samithu | 1 handful |
| Ghee | 1 small tin |
| Coconuts | 3 with mudi |
| White thread | small ball |
| Panneer (rose water) | 1 |
| Earthen pot | 1 |
| Plantain leaf | 2 |
| Mango leaves | 15 |
| Betel leaves | 30 |
| Areca nut seeval | 50 gr |
| Plantains | 6 |
| Lime fruits | 2 |
| Incense sticks | 2 pkts |
| Milk | 1 small can |
| Green Coconut | 1 |
| Kuthuvilakku oil | 1 small bottle |
| Wick for lamp | |
| Vibhoothi ( holy ash) | 1 small pkt |
| Sandal powder | 1 small pkt |
| Kumkumam | 1 |
| Silk cloth piece for Kumbham | |
| White Cloth | 3 meters |
| Veshti& Shawl to Gurukkal | |
| Sandal stick | 3 number |
| Small coins | |

| | |
|---|---|
| Sand | small qty |
| Veshty& Shawl for performer | |
| Garlands as desired | |
| Flowers | 4 bouquets |

If grandchildren are present ghee pandhams should be prepared.

| | |
|---|---|
| Kuthuvilakku for use | |
| Turmeric | 1 small can |
| If married woman deceased lime fruit | 1 |
| Agal lamp | 1 |
| Paddy small qty. | |

**Materials necessary for Divasam**

| | |
|---|---|
| Turmeric powder | 100 gr |
| Rice Flour | 250 gr |
| Ulundhu flour | 250 gr |
| Sesame seeds (black) | 100 gr |
| Sarkarai (Jaggery) | 100 gr |
| Honey | small qty |
| Milk | |
| Yogurt | |
| Coconuts | 5 |
| Raw rice | 1 kg |
| Betel leaves | 25 |
| Coconut seeval | 50 gr |
| Plantains | 6 |
| Camphor | 1 |
| White thread | 1 ring |
| Plantain leaves | 5 |
| Incense sticks | 2 pkt |
| Oil for lamp | 1 small bottle |
| Wick for lamps | |
| Vibhoothi (holy ash) | 1 small pkt |
| Sandal powder | 1 g |
| Kumkumam | 1 gr |
| Small coins | |
| Flowers | |

For donation to priest
Ginger
Lime fruit
Rice
Veshti& Shawl
Vegetables
Offerings to deceased
Cooked food Sweetmeats
Fruits
Green Coconut
For use

| | |
|---|---|
| KuthuVilakku | 2 |
| Sombu | 1 |

Additional Important information :

If the deceased person was born vegetarian and had Deekshai the Anthyeshti should be done on the body soon after the funeral rite is performed before the cremation. Then the family prepare food (like pongal) and offer it to the deceased. There is no eighth day ceremony for this person. On the last three days, take a small stone, regard it to be the deceased and do pooja. On the thirty first day, this stone, after pooja, is thrown in to running waterway.

## சைவ முன்னேற்றச் சங்கத்தின் செயற்பாடுகள்

The Activities of Saiva Munnetta Sangam (UK)

1. **சிதம்பரேஸ்வரர் ஆலயம் Chidampareswarar Temple**

நடராஜப் பெருமானை மூலமூர்த்தியாகக் கொண்டு அடியார்களின் சமய வழிபாட்டுக்கு உகந்த ஆன்மிகச் சாதனமாக திருவருள் வழங்கும் புண்ணிய சந்நிதி இது. தினசரி பூசைகள், சமய விழாக்கள், விசேட விரத நாள்கள், குருபூசைகள், அபிஷேகங்களைக் கண்டு தரிசிக்க இங்கு எம்பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்றார். ஆனி உத்தரமும், மார்கழித் திருவாதிரையும் எங்கள் ஆலயத்தின் கொடியேற்றத் தேர்த்திருவிழாக்களாகும்.

This temple is a holy shrine for Lord Nataraja. All the Saiva holy days, fasting and special days are observed here. There are two chariot festivals held annually.

2. **கட்டடப் பிரிவு Buiiding**

எமது சங்கத்தின் பணிகள் சங்கக் கட்டடத்திலிருந்து நிர்வகிக்கப்படுகின்றன. எமது ஆலயமும் நால்வர் மணி மண்டபமும் யோகா நிலையமும் இவற்றுடன் குருமார்கள், ஆலயப் பணியாளர்களின் குடியிருப்பும் அடங்கியது எங்கள் கட்டடம். இக்கட்டடம் சங்கத்திற்குச் சொந்தமானது.

We own the building where the Temple, Nalvar hall, the Yoga centre and the residence for the priests and temple workers are situated.

3. **வெளியீட்டுத் துறை Publication**

கலசம் காலாண்டு இதழ் Kalasam Quarterly

தோரணம் மாதாந்த மின்னிதழ் Thoranam – monthly e magazine

சங்கத்தினால் இலவசமாக வெளியிடப்படும் காலாண்டுப் பத்திரிகை கலசம். இதில் தமிழ் ஆங்கிலக் கட்டுரைகளும் செய்திகளும் மாணவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் ஏற்றதாகப் பிரசுரமாகின்றன.

மாதாந்தம் தோரணம் என்ற பெயருடன் வெளியாகும் மின் இதழ் இது. சங்கத்தின் செயற்பாடுகள், நிகழ்ச்சிகள், திட்டங்களை இங்கு காணலாம்.

We publish “Kalasam”, a free quarterly magazine, full of religious related articles. It is distributed in printed and electronic formats.

A monthly journal “Thoranam” is published monthly in electronic format which carries the Sangam’s events and news. Both these publications can be seen on our website.

4. **அறிவொளி வளையம் Enlightment Circle**

யோக நிலையம் நடத்துவதுடன், பல நாடுகளில் அன்னதானம், சமூகப் பணிகள் ஆகியவற்றையும் செய்கின்றது.

எல்லா வயதினருக்கும் யோகாப்பியாசப் பயிற்சியும், விளக்கமும்தரும் சேவையை இத்துறை செய்து வருகின்றது.

அத்துடன் இலங்கை, இந்திய, பிற நாடுகளின் மக்களுடைய சுகாதார, வைத்திய, உணவு, உடை, கல்வி மற்றைய பொது நல சமூகத் தேவைகளுக்கு பல திட்டங்களை மேற்கொண்டு நிதியுதவி செய்கின்றது.

Enlightenment Circle conducts Yoga classes for all ages. It also provides valuable services such as free meals for the needy and financial aid to services related to health, food, education, clothing and social projects

**5. பரீட்சைப் பிரிவு Examination**

ஆண்டுதோறும் மாணவர்களுக்கு (பாடசாலை செல்லும் வயதினர்) சைவசமயத்திலும் பண்ணிசையிலும் பரீட்சை நடத்திச் சான்றிதழ் வழங்கி வருகிறோம்.

We conduct examinations in Saivism and Thirumurai for school aged children and give them certificates.

**6. நால்வர் தமிழ்க் கலை நிலையம் Naalvar Tamil Academy**

ஞாயிற்றுக் கிழமைகளில் தமிழ் மொழிக் கல்வியைப் புகட்டிவருகின்றது. கிழக்கு இலண்டனில் Little Ilford பாடசாலையில் வகுப்புகள் இடம்பெறுகின்றன. இங்கு கல்வி பயிலும் சைவப் பிள்ளைகளுக்கு சமய வகுப்புகளும் நடைபெறுகின்றன.

A school is run for children to learn Tamil language.

**7. வெளிநாட்டுச் செயற்திட்டம் Overseas Project**

வெளிநாடுகளில் சங்கம் மேற்கொள்ளும் சமூகப் பணிகளுக்குப் பொறுப்பாக இந்தத் துறை செயற்படுகின்றது. மாணவர்களின் கல்வித் திட்டங்கள், மக்களின் வாழ்வாதாரத் திடடங்களில் நிதியுதவி செய்கின்றது.

We manage overseas projects to help with children’s education and social needs of deprived people.

**8. நால்வர் மூத்தோர் நிலையம் Naalvar Elderly Centre**

நால்வர் மூத்தோர் நிலைய உறுப்பினர்கள் வாரந்தோறும் திங்கட்கிழமைகளில் காலை 11.00 மணி தொடக்கம் 14.00 மணிவரை சங்க மண்டபத்தில் கூடுகிறார்கள்.

The elders meet every week on Mondays between 11am and 2pm.

**9. அந்திமக் கிரியைகள் Last Rites**

சைவ முன்னேற்றச் சங்கம் அந்திமக் கிரியை தொடர்பான எல்லாக் கிரியைகளையும் செய்வதற்குச் சைவக்குருக்களை ஏற்பாடுசெய்து உதவுகிறது.

We provide Priest to conduct last rites.

**10. சங்க அங்கத்துவம் Membership**

சைவ முன்னேற்றச் சங்கத்தில் ஆயுட்கால அங்கத்தவராக அல்லது சாதாரண அங்கத்தவராக இணைந்து மேலே குறிப்பிட்டுள்ள எமது பணிகளுக்குத் துணை செய்ய முன் வாருங்கள்.

Please join us as life member or ordinary member and help us to help you.

For further information, visit www.saivamunnettasangam.com

- Phone 0208 514 4732

அன்புடையீர்!

எங்களது சகோதரர் சமய சமூக சேவகர். சிவத்திரு. **இரத்தினம் பத்மநாதன்** அவர்கள் 15-08-2022 அன்று இவ்வுலக வாழ்வை நீத்தார்கள். மரணம் கொடியது. அது எப்போது ஒருவரை அரவணைத்துக் கொள்கின்றது என்பதுவும் நாமறியாத ஒன்று. அன்னாரின் நினைவாக இந்த வழிகாட்டும் அருட்பாடல்களும் மற்றும் சைவ சமய அபர கிரியைகளும் என்ற நூலை வெளியிடுகிறோம்.

நமது அன்புக்குரியவர்களின் பிரிவின் போது, நமக்கு ஓரளவு அமைதியைத் தரும் எனக் கருதும் இந்த வழிகாட்டும் அருட்பாடல்களை வெளியிடுவதில் எங்களுக்கு அமைதியைத் தருகின்றது.

இந்நூல் நமது சைவ சமய வெளிநாடு வாழ் இளம் தலைமுறையினர் புரிந்து கொள்ளும் வகையில் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வெளியிடுகிறோம்.

சகோதரர்கள் :
**திரு. வயிரமுத்து இரத்தினம் இராமநாதன்**
**திரு. வயிரமுத்து இரத்தினம் லோகநாதன்**
இலண்டன்.

பிள்ளைகள் :
திருமதி. **விஜயலெட்சுமி தேவகுமார்** ஆஸ்திரேலியா.
திரு. **செந்தூரன் பத்மநாதன்** இலண்டன்.

வெளியிட்டு நாள் :
03-10-2022



